முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி

2 அணா

முரசு 2 | சென்னை | 11—11—55 | வெள்ளி | ஒலி 33



விடிந்தால் தீபாவளி-இரவு முழுதும் ஊரெங்கும் வாண வேடிக்கைகள். தெருவக்குத் தெரு — வீட்டுக்கு வீடு — போட்டி போட்டுக் கொண்டு வாணம் கொளுத்தி மகிழ்ந்தனா. சந்தர்ப்பவாதிகளின் பச்சோந்தி உள்ளம் போல மத்தாப்புகள் பல நிறம் காட்டின. ஒரு சில அரசியல் தலைவர்களின போராட்ட அறிவிப்புகள் போல அவுட் வாணங்கள் ஆகாயத்தில் எழும்பின. ஆறுவுக்கு ஆறு-காறுவுச்கு காறு என்ற விததத்திலே எழுதப்படும் அர்த்தமற்ற அடுக்குச் சொல் வசனம்போல சீன வெடிகள்—ஊசிப் பட்டாசுகள்—தங்கள் திறமையைக் காட்டிக் கொண்டன. புதிய ஆடைகளைக்கண்டு பூரிப்பு தவழ ஓடி ஆடினர் சிறுவர், சிறுமியர். தலைத் தீபாவளிக்கு வந்திருக்கும் தம்பதிகள் உபசாரங்களுக்கும்—கிண்டல் உபத்திரவங்களுக்குமிடையே-உலலாசப் பொழுது போக்கினர். ஊரே மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கும் அந்த இரவில், நாராயணி மட்டும் சோகத்தின் நிழலாக தன்வீட்டில்அமாந்திருந்தாள். 'தீபாவளி தமிழரின் திருநாளல்ல; தமிழன் இறந்தநாளைக் கொண்டாடும் ஆரியப் பண்டிகை. கருத்துச்கு ஒவ்வாத கதை அளப்பு. அதை நமது பண்டிகையாகக் கொண்டாடிக் குதூகலிப்பது குருட்டுக் கொள்கை. ஆகவே அதில் கலந்து கொள்ளக் கூடாது'—என்பதல்ல நாராயணியின் எண்ணம்! அவள் அவ்வளவு அறிவு வளர்ச்சி பெற்றவளுமல்ல. போட்டி போட்டுக் கொண்டு புராணக் குட்டையிலே மூழ்கி எழும் பெண்மணிகளின் வரிசையிலே அவளும் ஒருத்திதான். ஆயினும் அவள் தீபாவளி கொண்டாடவில்லை.

காதைத் தொட முயலும் கண்களும், காண்பவரைக் கவரும் விதத்திலே அமைந்த உடற் கட்டும் பெற்ற நாராயணி, தன் வீட்டு முகப்பிலே அமர்ந்து, தீப வளி விழாவில் கலந்து மகிழும் ஊராரைப் பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

வீதியிலே கிருஷ்ணன்—சத்யபாமா விக்ரகம் அலங்கரிக்கப்பட்ட அழகான ரதம் பவனி வந்து கொண்டிருந்தது. 'வீரன்' கிருஷ்ணன் நரகாசூரனிடம் தோற்று மயங்கும் வேளையிலே, தனது கணைகள்கொண்டு அசுரனை அழித்தாள் பாமா என்பது தானே புராணம். சங்கு சக்ராயுதபாணியான விஷ்ணுவின் அம்சம் பரமாத்மாவே வீழ்ந்து விட்டபோது—அவரின் தேவி, அசுர சிங்கத்தின உயிரை அணைத்து விட்டாள் என்றால் ஆச்சரியமாகத்தானிருக்கும். எக்கணை வீசினாளோ; என்ன வக்கணை பேசினாளோ—எப்படியோ தேவியின தியாகத்தால் தேவர்களின் எதிரி ஒழிந்தான் என்று திருப்தி கொண்டனர் பக்தர்.

அந்தப் பக்தகோடிகள் பரந்தாமன் பெற்ற வெற்றியைக் கொண்டாடி, அவனையும் அவன் பிராட்டி பாமாவையும் ரதத்திலே வைத்துத் தெரு சுற்றினர். வெற்றியின் சூட்சுமம் தெரியாத விளையாட்டுப் பிள்ளைகளும், பரமாத்மாவுக்கு 'ஜே' போட்டனர். ஊர்ப் பிரமுகர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். நாயன வித்துவான்கள் தங்கள் திறமையைப் பொழிந்தனர். வீடெங்குமுள்ள பெண்டிரெல்லாம் ஆயாபாடி கண்ணனுக்கு ஆரத்தி எடுதது ஆனந்தப் பட்டனர் ஆடினர். பாடின

ஆனால் நாராயணியோ, ஆடவுமில்லை; பாடவுமிலலை; ஆரத்தி எடுக்கவுமில்லை; நடக்கும் வைபவங்களைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள். பரமாத்மாவின் ஊர்வலம் அவள் வீட்டைத் தாண்டிப் போயிற்று. அந்த வீட்டிலிருந்து யாராவது வந்து பகவானுக்கு காணிக்கை செலுத்துவார்கள் என்று பக்தர்கள் எதிர்பார்த்தனர். யாரும் வரவில்லை.

ரதம் போகும் திக்கை சிறிது நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தாள் நாராயணி. ரதத்திலே நரகாசூர வதமே சித்தரிக்கப் பட்டிருந்தது. அந்தக் காட்சியை அவள் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். மலையெனத் தோன்படைத்த நரகாசூரனின் மார்பிலே ஒரு வேல் பாய்ந்திருக்கிறது. குகையெனத் திறந்த வாயோடு நிற்கிறான் அவன். அவனெதிரே கிருஷ்ணன்—மயங்கிய நிலையில்! பாமா-வேல் பாய்ச்சும் சாயலில்! இதுவே ரதத்தில் சித்தரிக்கப்பட்டிருந்த தீபாவளிக் காட்சி. அறிவுக்கு அணை கட்டி, இன உணர்ச்சியைத் தடுக்க பெரும் சுவரும் எழுப்பி வைக்கும் அந்தப் பணடிகையில் தம்மை மறந்து பங்கெடுத்துக் கொண்டு, பரவசமுற்றனர் அந்த ஊரார்.

○ தொடர்ச்சி 4-ம் பக்கம்

எதிரொலி கிளம்புது! எக்காளம் கேட்குது!

அன்புள்ள குமார்,

டில்லியிலிருந்து வெளிவரும் 'வெண்ட்' என்னும் ஆங்கில ஏட்டில், 'ஐந்தாண்டுத் திட்டத் தின் கீழ் தென்னாடு புறக்கணிக் கப்படுகிறது'—என்ற பிரச்சினை யை முன்வைத்தே திராவிட முன்னேற்ற கழகம் வடக்கிற் கும், தெற்கிற்கும் உள்ள வித்தி யாசங்களை விளக்கி, கட்சி சார் பற்றவர்களையும் கவர்ந்து வருவ தாக ஒருவர் எழுதியிருந்ததை நீ படித்திருக்கலாம். ஆதாரங் களை அள்ளிக்குவித்து, தென்ன கம் தேய்ந்து வருவதையும், ஏம்பி அழுவதையும் நிரூபித் துக் காட்டினோம். நேருவின் பள்ளியிலே தயாரான ஏக இந் தியக் கிளிப்பிள்ளையாம் 'சுதேச மித்திரன்' சித்திரம் தீட் டிக் காட்டியது. குற்றாலத்திலே கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினர்கூட நாம் தட்டி எழுப்பிய பிறகுதான் விந்தியத் துக்கு இப்பால் இருப்போருக் கும் வாழ வசதி செய்து தர வேண்டுமென்று தீர்மானம் போட்டார்கள்.

'ஈவெண்ட்' கூறியதைப் போலவே நாம் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு எங்கி ருந்தெல்லாமோ ஆதரவு குவிந் து வருகிறது. 'போதும்' 'போ தும்'—என்று கைகாட்டித் தடுத்துவிட்டு, அடிமை போதையிலே மூழ்கியிருந்தவர் கள் எல்லாம், 'வேண்டாம் இந்த பேதம்'—என்று சொல்லி

சிதம்பரம் நகரசபைத் தேர்த லில், 5-வது தொகுதியில் வெற்றி பெற்றார், நமது தோழர் சி.எஸ். சடகோபன். இவரை எதிர்த்து நின்ற சென்னை காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரும், மற்ற மூவரும் 'டிபாசிட்' தொகையை இழந்தனர்.

விழி திறந்து புதுவழி காணத் துடிக்கிறார்கள்.

சென்ற நவம்பர் ஏழாம் தேதியன்று மைலாப்பூரிலே உள்ள தென்னிந்திய தேசிய சங்கம், ரானடே நூல் நிலையம் ஆகியவற்றின் பொன் விழா விற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில், பதஞ்சலி சாஸ்தி ரியார் பாடம் செய்து ஒப்புவித் ததைப்போல நம் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். பதஞ் சலியார் சாதாரண மடிசஞ்சி சாஸ்திரியாரல்ல; சுப்ரீம் கோர் ட்டின் மாஜி பிரதம நீதிபதி. இதோ, அந்தப் பேச்சின் ஒரு பகுதி:

"இதன் (ரானடே நூல் நிலையம்) ஐம்பதாண்டு உபயோககர மான சேவை மிகவும்பாராட் டுக்குரியது. தென்னிந்தியர் கள் குறுகிய மனோபாவ முடையவர்கள் என்ற மற் றொரு பழிச் சொல்லையும் பொய்ப்பிக்கிறது இச்சங்கம். மற்றொரு மாகாணத்தைச் சேர்ந்த ஜஸ்டிஸ் மகாதேவ கோவிந்த ரானடேயின் ஞாப கார்த்தமாக அமைக்கப் பட்ட இச் சங்கம் தமிழர் களின் தேசிய மனோபாவத் துக்கு ஓர் எடுத்துக்காட்டு. நானும் வட நாட்டில் பல நகரங்களைச் சுற்றிப் பார்த் திருக்கிறேன். ஆனால் ஓரி டத்திலாவது ராஜாஜி ஹால், அல்லது சீனிவாச சாஸ்திரி கல்லூரி, அல்லது கிருஷ்ண சுவாமி அய்யர் அரசியல் கழ கம் போன்ற எதையும் காணவில்லை..."

நாம் எப்போதோ சொல்லிய கருத்துக்கள்! — அந்த வட்டா ரத்திலே இப்போதுதான் எதி ரொலி கிளம்பியிருக்கிறது!

வட நாட்டில் எந்த மூலையி லாவது தென்னாட்டவன் பெய ரிலே தெருவோ, கூடமோ, கழகமோ இருக்கிறதா?—என்று கேட்கிறார், புது டில்லியிலே பல நாட்கள் இருந்து நீதி வழங் கிய பெரியவர்!

ராஜாஜி அரசியல் நிபுணர்; இருபதாம் நூற்றாண்டின் சாணக்கியர் — இங்குதான் பேசப்படுகின்றன இந்த வார்த் தைகள்! இங்குள்ள தேசிய வட்டாரத்திலே பளபளக்கும் அந்தப் பெயர், விந்தியத்துக்கு அப்பால் காரியம் போல கருத் துவிடுகிறதே!

தென்னாட்டுத் திலகர் வ. உ. சிதம்பரம்; திசையெட்டும்புகழ் நாட்ட வேண்டிய அந்தப் பெயர் வடநாடு அளவு சென்று வளர முடியவில்லையே!

பாரதியாரைப் போல எந்தக் கவிஞனும் பாரத சமுதாய'த் தின் பெருமைகளைச் சொல்ல வில்லை. பம்பாயிலே—தென்னாட் டவர்வாழும் மாதுங்கா, தாராவி பகுதிகளைத் தவிர, மற்ற இடங் களில் அந்தப் புரட்சிப் பாவல னுடைய பெயர் தெரியுமா?

ஆனால் இங்குதான் பார்க்கி றோம், ரானடேயின் பெயரிலே நூல் நிலையங்கள்! கோகலேயை அவர்களே மறந்து வருகிறார் கள்; ஆனால் அவர் பெயரிலே மன்றம் ஒன்றை சென்னை யிலே கட்டிக் காத்துவருகி றான், தென்னாட்டான்!

அதுமட்டுமா? பாமர மக்க ளின் வயிற்றில் அடித்து பல கோடி ரூபாய்களை விழுங்கி, ஏப்பமிட்ட டால்மியாக்கள் பெயரிலே 'புரம்' ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கிறான், பச் சைப் புரட்டுச் செயலுக்கு புகழ் மாலை பாடுவதைப்போல! அந்த அவமானச் சின்னத்தை மாற்ற வேண்டாமா-என்று கேட்டால், 'மானம் எதற்கு? பசியல்லவோ முக்கியம்!' என்று பேசுபவர்களையும் அரசி யல் உலகிலே நடமாடவிட்டுக் கொண்டிருக்கிறான், இங்குள்ள இளித்தவாய்த் தமிழன்!

ஆச்சாரியார் பெயரிலோ, சுப்ரமணியம் பெயரிலோ வட நாட்டில் ஒரு 'கக்கூஸ்'கூட கிடையாது. இங்கோ வடக்கே யுள்ள செல்லாக் காசுகளுக் கும் சிலை செய்து வைத்து தலை வணங்குகிறார்கள்!

—அதைத்தான் பதஞ்சலி யார் எடுத்துக் கூறியிருக்கிறார்! 'வசிஷ்டர் வாயிலிருந்து மகரிஷி பட்டம் கிடைப்பதுபோல'— என்று பழமொழி கூறுவார் கள். அக்ரகாரத்தின் 'விசுவரூப' மனிதரிடமிருந்தே வடக்கு— தெற்கு வேறுபாடுகள் வெளி வந்திருக்கின்றன!

துலாக்கோல் முனையிலே இருந்து நீதி வழங்கியவர் இப் போது வடநாட்டுத் தட்டு கனத்து இருப்பதையும், தென் னகத்துத் தட்டு பாரமிழந்து காற்றிலே மிதப்பதை தெளிவு படுத்துகிறார்.

வடநாட்டவர்களைக் குறுகிய மனப்பான்மை கொண்டவர் கள் என்கிறார்; நம்மை தேசிய மனப்பான்மை கொண்டவர் கள்-என்கிறார் சாஸ்திரியார்! பொருத்தமில்லாத பேச்சு!

இதோ; இருக்கின்றன தினவு கொண்ட தோள்கள்; அதிலே தூக்கிவையுங்கள் நீங்கள் உட் கார்ந்திருக்கும் பல்லக்கை!' —என்று உரத்த குரலில் சொல் லுகிறது உலகாண்ட தெக்க ணம்-இதற்குப் பெயரா தேசிய மனப்பான்மை?

'மயில் கழுத்து போல மனோ ரம்மியமாக இருக்கிறதே' —என்று மயக்குமொழிகளை உதிர்த்துக் கொண்டே நம் குரல்வளையை நெறிக்கிறார்கள் வடநாட்டு முரடர்கள்! சாஸ் திரியார் கூறுகிறபடி 'குறுகிய மனப்பான்மை'—என்ற ஒரு வார்த்தைக்கு நம் அகராதி யிலே இந்தப் பொருளா இருக் கிறது?

—நீயே யோசித்துப்பார், குமார்! நம்மை இழிவு படுத் தும் அந்த தேசிய மனப்பான் மை இனியும் இந்த நாட்டுக்குத் தேவைதானா?

அன்புள்ள,
பொன்முடி.

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 11—11—55 வெள்ளி

தடை செய்யுங்கள்!

நாம் குருதி மழை பொழிந்த குடந்தை நகரிலே விரைவில் தென்னாட்டின் 'கும்பமேளா' நடைபெற இருக்கிறது!

அதிலே கலந்துகொண்டு, தேங்கி நிற்கும் ஒரு குட்டையிலே குளித்து மகிழ சுமார் நான்கு லட்சம்பேர் வரப் போகிறார்களாம்!

ஆவடியிலே சென்ற ஆண்டு ஆட்டுமந்தைகள் கூடின. இந்த ஆண்டு ஆண்டவன் காரியமாக கும்பகோணத்திலே குருட்டு மதி படைத்தோர் கூடப் போகிறார்கள்!

தூய்மை வசதிகளைக் கவனிக்க சுகாதார இலாக்காவினருக்கு; பாதுகாப்பு அளிக்க போலீஸ் படையினருக்கு—இப்படிப் பல விதத்திலும் செலவு வைத்து செல்லாக் காசுக்கும் பயன்படாத உற்சவம் ஒன்று நடைபெறப் போகிறது!

குட்டையிலே நீராட குட்டைமனம் படைத்தோர் வருகிறார்கள். அதற்கு அட்டியின்றி ஆவன செய்து கொடுக்கிறது அரசாங்கம், அதன் விளைவுகளை எண்ணிப் பாராமல்!

குடந்தை நகரிலே நான்கு லட்சம் மக்கள் திரளுவதால் தஞ்சை மாவட்டத்தையே காலரா நோய் சூழ்ந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறதாம்—இப்படி எச்சரிக்கை விடுத்திருக்கிறார் தஞ்சை மாவட்டத்தின் கலெக்டர்!

புயலால் பின்னடைந்துபோன தஞ்சை, காலராப் பிணியினால் அதைவிடப் பரிதாபகரமான நிலையை அடையும்; எனவே குடந்தையிலே உருவாகும் 'மகாமகம்' புயலை அடக்குங்கள்—என்பதல்ல கலெக்டரின் கோரிக்கை!

மக்களைப் பார்த்துப் பேசுகிறார், ஜாக்கிரதையாய் இருங்கள் என்று!

வாந்திபேதியினால் எண்ணற்றோர் இயற்கையடைய ஏது இருக்கிறது. தாய்களும், சேய்களும், நடமாடும் எஃகுக் கம்பி நிகர் இளைஞர்களும், இணையில்லா வீரர்களும் குடந்தையிலே உதயமாகும் கொள்ளை நோய்க்குத் தங்கள் உயிர்களைக் காவு கொடுக்க நேரிடும்—அதைத்தான் அறிவிக்கிறார், தஞ்சை கலெக்டர்!

பிடியில் அகப்படுவோரைப் பிடி சாம்பலாக்கிவிடும் புலியொன்று வருகிறது; அதற்கு உணவு கொடுத்து உபசரித்து உதவி செய்யுங்கள்—என்று உபதேசம் செய்வதைப் போல—

அல்லி மலருக்கும், அக்னிக் குண்டத்துக்கும் வேறுபாடு தெரியாத மழலையிடம் கொள்ளிக் கட்டையைக் கொடுத்துவிட்டு விஷமம் செய்யாதே என்று ஜாடை காட்டுவதைப் போல—

அறிவுக்குப் பொருத்தமற்ற செயலைப் புரிந்து வருகிறார்கள், ஆட்சி பீடமேறிகள்!

குடந்தை என்னும் சிறிய நகரத்திலே நான்கு லட்சத்துக்கு மேற்பட்டோரைத் தங்கு தடையின்றி உலவுவதற்கு வாய்ப்பளித்துவிட்டு, மாநிலமெங்குமுள்ளோர் அந்த முனை நோக்கி பிரயாணம் செய்துவர 'ஸ்பெஷல் ரயில்கள்' போன்ற வாகன வசதிகளையும் கொடுத்துவிட்டு,அதனால் 'காலனைப் போன்ற காலராவும் வருமெ'ன்று கர்ஜனை புரிகிறார்கள்!

மக்களுடைய சுகாதார முன்னேற்றத்திலே உண்மையான அக்கறை இருக்குமானால் இந்த நாட்டு அரசாங்கம் செய்திருக்க வேண்டியதென்ன? ஒரு மாவட்டத்தையே பிடித்து வாயில் போட்டுக் கொள்ளக்கூடிய கொடியதோரு தொத்து நோய்க்குப் புகலிடம் அளிப்பதுதானா? தஞ்சை 'காலராக் காலனி'டம் தஞ்சமடையச் செய்வதுதானா?

—எச்சரிக்கை விடுப்பவர்கள் இதற்கான விடைகளை ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உலக சுகாதாரக் கவுன்சிலிலிருந்து ஆண்டுதோறும் உதவி பெறுகிறார்கள். இப்படித் தொகை தொகையாய் மக்களை நோய்க்குப் பலியிட சந்தர்ப்பம் வாங்கிக் கொடுப்பதற்காகத்தான் அந்த உதவி பயன்படுகிறதென்றால், உலக நாடுகள் யாவும் விலா நோகச் சிரிக்கும்!

தென்னகத்தின் செந்நெற் களஞ்சியத்தை சாவுமுனைக்கு அனுப்பாமலிருக்க அரசியலார் செய்யக்கூடிய மகத்தான பணி ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அதுதான் உடனே குடந்தையிலே நடக்கும் அநாகரிகத் திருவிழாவைத் தடைசெய்து, நான்கு லட்சம் பேர் அந்தக் குறுகிய இடத்திலே கூடாமலிருக்கச் செய்வது! இதைச் செய்து முடித்தார்களேயானால், பகுத்தறிவு காட்டும் பாதையிலே பீடு நடை போடுபவர்கள் என்பதோடு, மக்கள் வாழ நல்லவழி வகுத்துக் கொடுப்பவர்கள்—என்ற உன்னதமான பெயரினையும் இந்த அரசினர் தட்டிக் கொண்டு போகலாம்.

ஆனால்; தேர்தல்நேரத்தில் மட்டுமே தேசாந்திரம் கிளம்பிவிட்டு, மற்ற நேரங்களில் குறட்டைவிட்டுத் தூங்கும் கோலோச்சுபவர் இந்த நல்ல காரியத்தை எப்படிச் செய்வார்கள்?

கும்பமேளா என்னும் காட்டுமிராண்டிகள் விழாவிலே கலந்துகொண்டு, மக்கள் எறும்புகளைப் போல நசுங்கி உயிர் விட்ட காட்சிகளை ரசித்த மோதிலால் மைந்தரைத் தலைவராகக் கொண்டவர்கள் அவர்கள்!

டெல்லியிலே நடைபெற்ற ராமலீலா உற்சவத்திலே தோன்றி ஐந்து பேர் பிணமாவதற்கு இடமளித்தவரை இந் நாட்டின் கொலு பீடத்திலே அமர்த்தி அழகு பார்ப்பவர்கள், அவர்கள்தான்!

அத்தகையோர் ஆபாசத் திருநாளைத் தடுத்து நிறுத்தி, தஞ்சைக்கு வர இருக்கும் ஆபத்தை நிச்சயமாகத் தடுக்க மாட்டார்கள்!

ஆனால் ஒன்றை மட்டும் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும்.

மீண்டுமொரு உலகப் போர் உதிக்குமேயானால்,உயிர்கள் அனைத்தும் பாழாகுமே என்று பயந்து, பலப்பல நாடுகள் சென்று, பஞ்ச சீலம் தயாரித்து,ஜீவராசிகளின் மேல் தனக்குள்ள பரிவைக் காட்டிக் கொள்கிறார், பண்டிதர்! அப்படிப்பட்டவரது ஆட்சி தஞ்சையிலே ஆயிரக் கணக்கானோர் அழியப்போவதை அனுமதிக்குமேயானால், அவர் தடவிக் கொடுக்கும் வெள்ளைப் புறா அந்த நேரம் கொடிய நகமும், கூர் மிகுந்த மூக்கும் கொண்ட கழுகாகிவிடும்—என்பதை நாட்டு மக்கள் மறந்து விடக்கூடாது!

இருதயம் நின்றது!

இயக்கத்தின் வளர்ச்சியே தனது மூச்சாகக் கொண்டிருந்த திருச்சி தோழர் ஏ. இருதயராஜ், எம். ஏ. அவர்கள், 5—11—55 மாலை 7-30 மணிக்கு இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிவிக்க மிகவும் வருந்துகிறோம்.

திருச்சி ஜோசப் கல்லூரியின் பேராசிரியராக மட்டுமல்லாமல் திராவிட மக்களுக்குப் பேராசிரியராகவும் இருந்து பணிகள் பல புரிந்திருக்கிறார் தோழர் இருதயராஜ்.

6—11—55 ஞாயிறு மாலை 5 மணிக்கு, எடத் தெருவிலுள்ள அவர் வீட்டிலிருந்து, ஏராளமான இயக்கத் தோழர்களும், நகரசபை உறுப்பினர்களும், கல்லூரி ஆசிரியர்களும், மாணவ-மாணவிகளும் அடங்கிய சவ ஊர்வலம் நடைபெற்று, இரவு 7 மணிக்கு சவ அடக்கம் செய்யப்பட்டது. திருவாளர்கள் இராட், நசுருதீன், எம். எஸ் மணி, எஸ். பிரான்சிஸ், ரம்போலா மாஸ்கானஸ்—ஆகியோர் இறுதி வணக்கம் தெரிவித்து, அவர் செய்த சேவைகளைப் பற்றிப் பேசினார்கள்.

அவரது பிரிவால் திருச்சி நகரம் தூண்களில் ஒன்றை இழந்தது திராவிடர் இயக்கம் உற்றதொரு நண்பரை இழந்தது. அன்னாரை இழந்து தவிக்கும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

நாராயணியின் கண்களை விட்டு ரதம் மறைந்தது. ஆணைச் சத்தம் அவள் காதைத் துளைத்துக் கொண்டுதானிருந்தது. ரதத்திலே அவள் கண்ட சூரசூர வதக் காட்சி, அவள் நெஞ்சை விட்டகலவில்லை. நினைவுகள் அலை மோதின.

★

நடுத்தெருவிலேதான் நாராயணியின் வீடு. நடுத்தெருவிலே வீடுகட்ட நகரசபையார் எப்படி அனுமதித்தார்கள்; நகரசபையாருக்கு நாராயணியின் மீது அவ்வளவு அனுதாபம் பிறக் காரணமென்ன—என்றெல்லாம் யாரும் சந்தேகப்படத்தேவையில்லை. அவள் வீடு இருந்த தெருவுக்குப் பெயரே நடுத்தெருதான்!

நாராயணி, நடுத்தெருவிலே, நடுத்தரமான குடும்பத்திலே, நாலு பேர் அண்ணன் தம்பிகளுக்கிடையிலே பிறந்தவள். ஐந்து மக்களையும் விட்டு விட்டுப் பெற்றோர் விடைபெற்றுக் கொண்டனர். மாயூரம் காவேரியாற்றிலே துலா முழுக்குஆடுவதற்காகச்சென்ற சகோதரர்கள் நால்வரும், திரும்பி வராமலே போய்விட்டனர். இளைய தம்பி, ஆற்றுச் சுழலிலே சிக்கிக் கொள்ள, அவனை விடுவிக்க ஒருவர் பின் ஒருவராக மூவரும் குதித்து, அனைவரும் நேரே "மோட்ச லோகம்" போய்விட்டனர் என்ற செய்தி மட்டுமே நாராயணிக்குக் கிடைத்தது.

இந்த சோகச் சுமை அவள் தலையிலே விழும்போது, அவள் பருவக்கொடி! சிற்பியின் கைத்திறனை உயிர் பெற்றது போன்ற சிந்தை கவர் உருவம்! புருவம்-பருவம்—எல்லாமே, ஆண்களின் கருவ மடக்கும் விதத்திலே அமைந்திருந்தன. அழகுச்சிலை! அற்புதப் பதுமை! தேன்மலர்! திராட்சைக்கொடி! ஆனால் அந்த வாச ரோஜா, வேலியின்றி—பாதுகாக்க யாருமின்றி—தன்னந்தனியே வாடிக் கொண்டிருந்தது. 'தந்தை, தாய், அண்ணன், தம்பி—எல்லோரையும் விழுங்கிவிட்டு இந்தப் பாவிக்கு மட்டும் பாழும் உயிரை ஏன் வைத்திருக்கிறாய்?' என்று அவள் பகவான் சன்னிதானத்திலே பலமுறை அழுதிருக்கிறாள்.

அப்படி அழுவதற்காகஅவள் ஆலயத்திற்குச் செல்லும் போதுதான் குருக்கள் கிருஷ்ணய்யரின் சந்திப்பு ஏற்பட்டது. கிருஷ்ணய்யர், கோயில் குருக்கள் என்ற போதிலும் மிடுக்கான நடையுடை பாவனைகள் உடையவர். கழுத்திலே அழகான தங்கச் சங்கிலி, அந்தச் சங்கிலியின் முனையிலே ருத்ராட்சக் காய், இடுப்பிலே மயில்கண் வேட்டி, மேலே ஒரு வெண்பட்டுத் துண்டு, பி. ஏ. குடுமியுடன் கூடிய அமெரிக்கன் கிராப்பு—இவைதான் கோயில் குருக்கள் கிருஷ்ணய்யரின் அடையாளங்கள்! மறந்து விட்டேனே; மன்னிக்கவும்—அன்றாடம் சலவை செய்யப்படும் பூணூல் உண்டு, மார்பிலே! விபூதிப் பூச்சு உண்டு; விஷ்ணுவுக்கு விசேடமான நாட்களிலே நாமமும் போடுவார்;பட்டையாக அல்ல; பக்குவமாக-சிறிய கோடாக—சிங்காரம் கெடாமல்!

வயதோ, முப்பதுக்கு மேல் இல்லை. இந்த ஒரு முதல் போதாதா; காதல் வியாபாரத்தை ஆரம்பிக்க!

ஐம்பது அறுபது ஆனதுகளே, நரை மயிர் கருக்கும் தைலம் தடவிக் கொண்டு—பொய்ப் பல்லால் புன்னகை புரிந்து—நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை யென்று காதல் வாணிபம் நடாத்த கன்னியரைத் தேடி அலையும்போது, முப்பதே வயதான கிருஷ்ணய்யர் மட்டும் சும்மா இருப்பாரா? அதுவும் புறா வலுவிலே பறந்து வருகிறது—வட்டமிட்டுப் போகிறது என்றால், கேட்கவும் வேண்டுமா?

நாள் தோறும் நாராயணி, ஆண்டவன் சன்னதியிலே கண்ணீர்த் துளிகளை சிந்தினாள். கிருஷ்ணய்யர், விபூதிப் பிரசாதம் அளித்து வந்தார். இந்த விஷயம், பல நாட்கள் மௌனமாகத்தான் நடந்து வந்தது. மாலை எப்போது வரும்; அப்போது அந்த மயிலும் வருமே—என்று பாதை மீது பார்வையை விரிக்க ஆரம்பித்தார் கருஷ்ணய்யர். நாராயணி கடவுளின் முன்னே தினம் தினம் அழவேண்டிய காரணமென்ன?—குருக்களின் இதயத்தைக் குடைந்தது இந்தக் கேள்வி. அவளையே கேட்டுவிடத் தீர்மானித்தார். ஆனால் அவள் வரும் நேரத்திலேதான் அந்தப் பாழும் பக்தகோடிகளும் ஆலயத்திற்கு வருவது வழக்கமாக இருந்தது. தனிமையில் அவளிடம் பேச அவருக்கு வாய்ப்பில்லாமலே போய்விட்டது.

நடுத்தெரு நாராயணி

(தொடர்ச்சி)

★

ஒருநாள் — சோமவாரம்—கோயிலிலே அபிஷேக ஆராதனைகள் அமர்க்களப் பட்டன. நல்ல கூட்டம். கச்சேரிகள் வேறு.அந்த ஊர்பெரிய மனிதர் ஒருவர் காங்கிரசிலே சேர்ந்துவிட்டதற்காக நடத்தப்பட்ட திருவிழா அது. கோயிலுக்கு எதிரேயுள்ள காளி மண்டபத்தில் ஆடு வெட்டி பலி கொடுத்து, கள்ளுக் குடங்களும் வைத்துப் படைத்து, காந்தியாரின் கொள்கைக்குப் பெருமை கொடுத்தார்கள் அதையொட்டி பெரிய கோயிலிலும் உயர்ந்த முறையிலே உபயம் நடத்தினார்கள்.

அன்றைய தினம் வழக்கம் போல் நாராயணி வந்தாள். காத்திருந்த அய்யரும் பூத்திருந்த மல்லிகை வந்துவிட்டதென மகிழ்ந்தார். பரதம் நடக்குமிடத்திலும்— பாட்டுக் கச்சேரி நடக்குமிடத்திலும் பக்தர்கள் தங்கள் கவனத்தைத் திருப்பியிருந்தார்கள். நாராயணியோ, கர்ப்பக்கிரகத்திற் குள்ளே நுழைந்தாள். தாமரை மொட்டுபோல் கரங் குவித்தாள். காமனை வெல்லும் விழி மூடினாள். இமை அணையைப் பிளந்து கொண்டு கண்ணீர் வெள்ளம் புறப்பட்டு, கன்னத்தின் மேட்டிலே கிளைகளாகப் பிரிந்தது. ஆழ்ந்த பக்தியிலே மெய்மறந்து நின்றாள். "எனக்கு வழி காட்டு அப்பனே! என்னை மட்டும் இந்த உலகத்திலே ஜீவித்திருக்க ஏன் விட்டாய்? பெரிய குடும்பத்திலே தனிமரமாய் நின்று தவிக்கிறேனே; இது உனக்கு நியாயந்தானா?" என்று கதறினாள்.

பிரார்த்தனை முடிந்தது. பிரசாதம் தர அய்யர் வந்தார். விபூதியை வாங்கி நெற்றியிலே இட்டுக் கொண்டாள். திரும்பினாள்.

காய்ந்துபோன தொண்டையைக் கனைத்துக்கொண்டு, அய்யர் ஏதோபேச வாயெடுத்தார். நாக்கு எழவில்லை. கஷ்டப்பட்டு பேசியே விட்டார், நடுக்கத்தோடு! "ஏனம்மா, தினந்தோறும் இப்படிக் கண்ணிலே ஜலம் விடுறே?"

இதைக் கேட்டதும் நாராயணிக்குத் தூக்கி வாரிப் போட்டது. தானோ, ஒரு பருவ மங்கை. வீட்டை விட்டு வெளியிலே கிளம்புவதே தப்பு; கோயிலுக்கு வருகிறாள் என்பதால் யாரும் குறை சொல்ல மாட்டார்கள். ஆனால், அங்கே ஒரு ஆடவரோடு பேசுவது என்பது ஒத்துக் கொள்ளக்கூடிய விஷயமா? இவ்வளவையும் அவள் நினைத்துப் பார்த்து, பதில் சொல்வதா, இல்லையா என்ற தீர்மானத்துக்குவர நேரமில்லை. அவளும் நடுங்கியவாறே, "எல்லாம் என் விதி!" என்று பதில் கூறினாள்.

"நாராயணி! நோக்கு என்ன கஷ்டம்னு நேக்கு நன்னாத்தெரியும். பெத்தவாள், பிறந்தவாள் எல்லாம் போயிட்டா! ஒண்டிக் கட்டையா இருந்து தவிச்சிண்டிருக்கே!" என்று பீடிகை போட ஆரம்பித்தார் குருக்கள்.

நாராயணிக்கு அழுகை அதிகமாயிற்று. "நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு, கர்ப்பக்கிரகத்தை விட்டு வெளியேறினாள் அவள்.

ஆண்டவன் தரிசனம் முடிந்ததும், கோயில் பிரகாரத்தை சுற்றிவிட்டுப் போவது நாராயணியின் பழக்கம். அவ்வாறே, அன்றும் அவள் பிரகாரத்தை சுற்றிவந்து கொண்டிருந்தாள். பிரகாரத்திலே, அப்பிரதக்ஷணமாக சுற்றி வந்து கொண்டிருந்த கிருஷ்ணய்யரை அவள் எதிரே கண்டாள். நாணத்தால் தலையைக் குனிந்தவாறு அவரைக் கடந்து செல்ல முயன்றாள். கிருஷ்ணய்யர் சுற்று முற்றும் பார்த்தார். பிரகாரத்தின் பக்கம் யாருமே வரவில்லை. எல்லோருமே கச்சேரி மண்டபங்களில் நிறைந்திருந்தனர். "நாராயணி, நில்!" என்றார் மெதுவாக! நாராயணிக்குக் கால் பெயரவில்லை. நின்று தீர வேண்டியிருந்தது. கிருஷ்ணய்யர் அவள் எதிரே ஓடினார். அவள் கால்களிலே தலைமுட்டுமளவுக்கு சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு வீழ்ந்தார்.

நாராயணிக்கு ஒன்றுமே புரியவில்லை. 'சுவாமி! சுவாமி!!' என்று கத்தி விட்டாள்.

"நாராயணி! அடியேனை ஏற்று ரட்சிப்பாய்! தேவி விக்ரகத்தின் முன்னேகூட அடியேன் இப்படி நமஸ்கரித்தது கிடையாது. நீதான் எனக்குத் தேவி! என்னை ஏற்றுக்கொள்!" என்று மன்றாடி நின்றார்.

"சுவாமி! தாங்கள் தேவகுலம்—நானோ..." என்று இழுத்தாள் அவள்.

"முற்றும் கடந்த பெரியவாளுக்கு எல்லா குலமும் ஒரே குலந்தான்! நான் ஆண்குலம்—நீ பெண்குலம்—வா, இருவரும் காதல் குளத்திலே நீந்துவோம்"என்று கையைப் பிடித்தார் அய்யர்.

"அய்யோ, சாமி! ஆண்டவன் கோயில்...' என்று எச்சரித்தாள் நாராயணி.

"அருகில் ஒன்றும், தலையில் ஒன்றும் வைத்திருப்பவர் தானே ஆண்டவன்—இதுதெரியாதோ நோக்கு!" என்று அவள் ஜடையைப் பிடித்து விளையாடினார் குருக்கள்.

'அய்யோ, இதெல்லாம் கூடாது—எனக்குப் பிடிக்காது' என்று சொல்லிவிட்டு, தட்டிக் கழித்துவிட எண்ணி வாயைத் திறந்தவள்—ஏனோ தெரியவில்லை; "யாராவது பார்த்து விடுவார்கள்!" என்று நாணிக் கோணி நகர்ந்தாள். இந்த வார்த்தை போதாதா; அய்யருக்கு!

"எல்லா பசங்களும் பரத நாட்டியம் பார்த்துண்டு இருக்கான். ஒருத்தனும் வரமாட்டான்; பயப்படாதே" என்று சொல்லி அய்யர் அவளைஎட்டிப் பிடித்தார். அவள் கன்னம் சிவந்தது. அவரது கையிலே தன்னை ஒப்படைத்தாள். திடீரென்று நாராயணிக்கு ஞானோதயம் ஆயிற்று. அய்யரின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "சுவாமி! என்னைக் காப்பாற்றுங்கள்! நீங்கள்தான் எனக்குத் துணை!" யென்று 'ஓ' வென அலறினாள்.

அய்யர் அவளை வாரியெடுத்துத் தாவியணைத்து தைரியங் கூறி வீட்டுக்கு அனுப்பிவைத்தார். அவளும், ஆண்டவன் அருள்பாலித்து விட்டான்

★ தொடர்ச்சி 7-ம் பக்கம்

One side page dark



(5) இரு 'வேடிக்கை'கள் !

திசையெட்டும் நெருப்புக் குழம்பை வாரியிறைத்துக் கொண்டு, வளமான பயிர்களையும், உயிர்களையும் வாயிற் போட்டுக் கொண்டிருக்கும் எரிமலையிலே குளிர் காய நினைப்பவர்கள்—

புயல் வீசிக் கொண்டிருக்கும் நேரத்திலே பட்டம் பறக்க விடுபவர்கள்—

இந்தப் பட்டியலிலே இடம் பெறுவோர் இந்த நூற்ருண்டிலுமா இருக்கிருர்கள்—என்று வியப்புடன் கேட்பார் புல்கானின். ஊர் எரிந்தபோது சங்கீதம் பயின்ற நீரோவும், மக்கள் வயிறு பற்றி எரிந்தபோது அதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த ஜார்களும் அவர் படித்த முதலாளித்வ நாடுகளின் வரலாற்றிலே நடமாடிக் கொண்டிருக்கிருர்கள். அந்த நினைப்புடனே புல்கானினும் பாரத பூமிக்கு வருவாரேயாஞல்; விடுதலையடைந்த இந்த மண்ணில் நல்லாட்சி நடம்புரிகிறது என்று நம்புவாரேயாஞல் அவரது பார்வைக்கு இன்ஞெரு முக்கியமான காட்சியையும் காட்ட வேண்டியவர்களாகிரேும்.

நவம்பர் பதினன்காம் தேதியன்று தீபாவளி என்ற பெயரிலே, கடைந்தெடுத்த முட்டாள்தனத்தைக் கொள்கையாகக் கொண்ட கொண்டாட்டமொன்று வருகிறது.

இது ஆகஸ்ட் 15-அல்ல; குடியரசு நாள் அல்ல-அரசாங்கம் கொண்டாடி மகிழ்வதற்கு!

நரகாசூரன் என்னும் திராவிட மன்னனை ஒரு ஆரிய அரசன் கொன்ற நாள்; திராவிட இனத்தவரின் சோகப் பெருந் தினம்!

'அய்யகோ! உன் போன்ற நெருப்புப் பொறிகள் அழிந்ததனுல் அல்லவோ ஆரியம் புகுந்தது; நம்மினம் அழிந்தது'—என்று எல்லோரும் கருந்துணி அணிந்துக் கதற வேண்டிய நாள்!

அசுரன் அழிந்தாலும்—அதைக் கொண்டாடுவதற்கு டில்லியிலிருந்து வருகிருர் இராஜேந்திரர்!

புயலால் வாடினேம்; புழுப் போலத் துடித்தோம்; கத்தாழைக் கிழங்குகளைத் தின்று காட்டுமிராண்டிகளைவிடக் கேவலமாக வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தோம்; அப்போது இங்கு வந்து ஆறுதல் சொல்ல டெல்லியிலிருந்து ஒரு அணு கூடவரவில்லை. இப்போது இரத கஜ துரக பதாதிகளுடன் இராஜேந்திரர் வருகிருராம், தீபாவளி கொண்டாடுவதற்கு!

அன்றிரவு கவர்னர் மாளிகையிலே வாண வேடிக்கைகள் நடைபெறுமாம்!

வருஷம் முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களும் சரியான ஆகாரமின்றி ஆமை ஓடுகளாய் இளைத்து, எலும்பும் தோலுமாய்க் காட்சியளிக்கும் அனைதைக் குழந்தைகளுக்கு அன்று ஒரு நாள் மட்டும் சோறு போடப் படுமாம்!

மதச் சார்பற்ற அரசாங்கத்தின் தலைவர் இந்து மதத்தின் தலையாய தினத்தைக் கொண்டாடுகிருர்!—டில்லி ராஷ்டிரபதி பவனத்தில்,சொந்த இடத்தில் அவர் தீபாவளியன்று பட்டாசு கொளுத்தியிருப்பாரேயாஞல், நாம் மௌனமாகியிருப்போம்; 'இராஜேந்திரர் படித்திருந்தும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத இத்தகைய விழாவை இவ்வளவு விமரிசையாகக் கொண்டாடுகிருரே—என்ற அளவோடு நம்முடைய விமர்சனமும் முடிந்திருக்கும்!

ஆகஸ்ட் 15-ம் தேதியன்று பிரசாத் கிண்டி மாளிகையிலே தங்கிக்கொண்டு, விருந்து நடத்தி விடுதலை விருத்தத்தின் பழைய ராகச் சுவைதனை நினைத்துப் பரவசம் கொள்ளட்டும்—அதிலே நியாயம் இருப்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்!

நவம்பர் 14-ஜனவரி 26-ஆக இருந்திருந்தால்; அன்று இந்த ஆர்பாட்டங்கள் நடந்திருந்தால்: புல்கானின் பார்த்துச் சிரிக்கக்கூடிய இந்த கட்டம் நடைபெற்றிருக்காது!

ஒரு சாதாரண திருநாளைக் கொண்டாடுவதற்காக ஒரு நாட்டின் ஜஞதிபதி, தலைநகர் விட்டு வேருெரு நகர் செல்கிருர்; அன்று வாண வேடிக்கைகள் நடத்துவதற்காக நாட்டு மக்களின் வரிப் பணம் எவ்வளவு விரயமாக்கப்படுகிறது!—இந்தச் செலவுக் கணக்கு விபரமெல்லாம் புல்கானின் வரும் சமயம் வெளியாகிவிடும்!

இதைப் பார்த்து ரஷிய பிரதமர் விலாப்புறம் வலியெடுக்கும் அளவிற்குச் சிரிக்கட்டும்!

சென்னையிலே தீபாவளி கொண்டாடுவதால் வடக்கு-தெற்கு என்னும் வித்தியாசம் குறையுமாம்! தூர இருக்கிரேுமே என்ற எண்ணம் இராஜேந்திரர் வாணவேடிக்கை நடத்துவதால் குறைந்துவிடுமாம்!

—இப்படி விளக்கவுரை தரப்படுகிறது நமக்கு!

கிருஸ்துமஸ் விழா கொண்டாடுவதற்காக ரஷ்ய நாட்டு ஜஞதிபதி மாஸ்கோவிலிருந்து வேறு நகரம் செல்வதில்லை! ஆஞல் பாரத நாட்டில் மற்ற நாடுகளில் நடக்காத காரியங்கள் சர்வசாதாரணமாக—சிறிதும் வெட்க உணர்ச்சியின்றி நடத்தப்படுகின்றன!

புல்கானின் நாட்டிலும்தான் விழாக்கள்நடைபெறுகின்றன. பிரசாத் பட்டாசு கொளுத்துவதற்கு ஒருவாரம் முன்னதாக, நவம்பர் ஏழாம் தேதியன்று ரஷ்யாவிலும் ஒரு விழா நடைபெற்றது.

நவம்பர் 7—ரஷ்யப் பாட்டாளி மக்கள் கால் விலங்கை ஒடித்தெறிந்த தினம்!

வயலும், பொழிலும்; நிலமும், நீரும்; சுரங்கமும், சுனையும் பொதுமக்கள் சொத்தாகிவிட்ட புனித நாள்!

முப்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு, 1917-ல், ஆரணங்குகளின் மடியும், மதுக் குடியும் உலகமென்று கிடந்த ஜாரைச் சுற்றிச் சுழன்ற முதலாளித்வம் தொண்டை விக்கிச் செத்துப்போன சுபதினம்!

அதைச் சென்ற வாரம் கொண்டாடினர்கள்—சாதாரண விழாவாக அல்ல! சாதனைகளால் அந்த நாளுக்கு மரியாதை செலுத்தினர்கள்!

அந்த முப்பத்தெட்டு ஆண்டுகளில், பெரிய தொழில்கள் ஜார் காலத்து ரஷ்யாவின் வளமான காலத்தில்இருந்ததைவிட இப்போது முப்பத்திஜந்து மடங்கு பெருகியிருக்கிறதாம்!

ஜாரின் அட்டகாசங்கள் உச்சநிலையில் இருந்தபோது, டஜிகிஸ்தான் பிரதேசத்திலே சுமார்

★தொடர்ச்சி 10ம் பக்கம்

வயிற்றுப் பசியை அடக்க சாவிலே மருந்து காணுகிருர்கள் மக்கள். இந்தக் கொடுமையைத் தடுக்க முடியவில்லை—வாண வேடிக்கை நடத்தி வரிப் பணத்தை விரயமாக்குகிருர் ராஜாங்கத்தின் தலைவர்!



சென்ற இதழில்.....

பரிமளாவின் யோசனைப்படி ஷோக் சுந்தரியின் உருவத்தில் வந்திருப்பது பரிமளாதான் என்று அம்பலத்திடம் ராமன் கூறுகிறான். அதுவும் நல்லதாகப் போயிற்று என மகிழ்ந்த அம்பலம்-துரை. பரிமளா காதலை நிறைவேற்றுவதில் அக்கரையுள்ளவர் போல நடித்து, ஊர்ப்பொது மக்களைக் கூட்டி, தாண்டவனுக்கு நேராகத் திருமணப் பேச்சை ஆரம்பிக்கிறார். தாண்டவன்—பரிமளா, துரை திருமணத்தை எதிர்க்கிறார். அம்பலம் பிடிவாதமாக 'திருமணம் செய்தே தீருவேன்' என்கிறார். தாண்டவன் வெளியேற்றம். திருமணத்தை முடித்து, அவர்களையும் கொலை செய்துவிட்டு, அந்தப் பழியைத் தாண்டவன் மீது சுலபமாகப் போட்டு விடலாம் என்று அம்பலம் மாயாண்டியிடம் கூறுகிறார். மாயாண்டியும் மகிழ்கிறார்.

47

திருமணம்!

"ஊரிலே ஒரு பெரிய புள்ளி—கோபக்கார மனிதர்—கொலை செய்யவும் தயங்காத சூரன் — இப்படியெல்லாந்தான் அம்பலத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அம்பலம் ஒரு பெரிய ராஜ தந்திரி என்பது இப்போதுதான் புரிகிறது எனக்கு!" என்று மாயாண்டி புன்சிரிப்போடு கூறினார். அந்தப் பாராட்டு அம்பலத்தின் தலைக்கனத்தை இன்னும் சிறிது அதிகமாக்கியது.

"புதையல் ரகசியத்தை அந்த துரைப் பயலிடம் முழுவதும் சொல்லியிருந்தால், விழலுக்கு நீர் இறைத்ததுபோல் போயிருக்கும். குப்பைமேட்டில் வைரத்தை வீசி எறிந்ததுபோல் ஆகியிருக்கும். நல்லவேளை, எந்த இடத்திற்கு அந்த ரகசியம் வரவேண்டுமோ; அந்த இடத்திற்கு வந்துசேர்ந்தது. நாம் இருவரும், கடவுள் கிருபையால் ஒன்று சேராமல் போயிருந்தால், புதையலை இவ்வளவு புத்திசாலித்தனத்தோடு எடுப்பதற்கு எப்படி முடியும்?"

மாயாண்டி அம்பலத்தை அளவுக்கு மீறி பெருமைப் படுத்திக் கொண்டேயிருந்தார். அம்பலம், அந்த முகஸ்துதியிலே மயங்கியே விட்டார் என்றாலும், மாயாண்டிக்குத் தரவேண்டிய பங்கையும் தராமல் ஏமாற்றுவதற்கு என்ன வழி இருக்கிறது என்று யோசிக்கத் துவங்கினார். அவரிடமிருக்கிற ஒரே ஒரு வழி—ஆளையே அழித்து விடுவதுதான்! சரி; காரியம் முடியட்டும்; பிறகு இந்தக் கருவேப்பிலையைக் கசக்கி எறிவோம் — என்று முடிவு செய்துகொண்டு பரிமளா—துரை இருவரின் திருமணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க ஆரம்பித்தார்.

பெரிய பந்தல் போடுவதற்கான ஆட்கள் வந்து கூடிவிட்டார்கள். எல்லோருக்கும் ஆடம்பரமான சாப்பாடு போட வேண்டுமென்ற திட்டப்படி அறுசுவை உண்டி தயாரிக்கும் சமையற்காரர்கள் வரவழைக்கப்பட்டு விட்டார்கள். ஊரெல்லாம் வெள்ளியம்பலம் வீட்டுக் கல்யாணத்தைப்பற்றியே பேச்சாக இருந்தது. தாண்டவன் கோபாவேசமாக இருந்தாலும், கூண்டுக்குள் புலிபோலத்தான் கிடக்க நேரிட்டது. வெளிப்படையாக வெள்ளியம்பலத்தை எதிர்த்து எதுவும் செய்யும் தைரியம் இல்லை. உயிர்மீது ஆசையுள்ள யாரும் அம்பலத்தை எதிர்க்கக் கூடாது என்பதுதானே ஊராருக்குத் தெரிந்த பாடம். ஆதலால், அம்பலம் செய்யும் தவறுகளைக்கூடப் புகழ்ந்து பேசும் தப்பட்டைகள் அதிகமாகிக்கொண்டேயிருந்தனர். இந்த நிலையில் தாண்டவன் என்ன செய்ய இயலும்? அதுவும், அம்பலம் செய்வதோ ஒரு நல்ல காரியம். காதல் திருமணம் நடத்தி வைக்கிறார். இதைப்போய் ஒரு தகப்பன் முட்டாள்தனமாக எதிர்க்கிறானே; என்றுதான் மக்கள் கேலி பேசினார்கள்.

பரிமளாவின் தாயாருக்கு மட்டும், எப்படியாவது மகளும், மருமகனும் மணவறையில் இருப்பதைப் பார்த்து ஆனந்தப்பட வேண்டுமென்ற ஆவல் அலை மோதியது. என்ன இருந்தாலும் தாயல்லவா? ஒரே மகள்! உயிர் போலப் பாதுகாத்தாள் அவளை! காணாமலே போய்விட்டாள் என்று கண்ணீருங் கம்பலையுமாக இருந்த சமயம்; இருக்கிறாள் என்ற சேதியே இன்பத் தேனாக வந்து பாய்ந்தது அவள் இருதயத்திலே! அப்படிப்பட்ட ஆசை மகளின் வாழ்க்கையிலே ஒரு திருநாள் — அந்தத் திருநாளை ஆசைதீரக் காணவேண்டுமென்ற அவா, அன்னைக்கு இருக்காதா என்ன? அதுபற்றித் தாண்டவனிடம் வாதாடிப் பார்த்து தோல்விகண்டாள் அவள். எப்படியும், திருமண சமயத்திலாவது ஓடிப்போய்ப் பார்த்துவிட்டு வந்துவிட வேண்டுமென்று திட்டம் திட்டிக்கொண்டிருந்தாள் அவள்.

திருமண தினமும் வந்துவிட்டது. துரைக்குக் கல்யாணம் என்று கேள்விப்பட்டு அவனது நண்பர்களும் வந்து சேர்ந்தனர், ஆனந்தனின் தலைமையிலே! அவர்களையெல்லாம் அம்பலம் உபசரித்து, தங்க வைத்தார். மாயாண்டிக் கிழவரோ — ஆனந்தனோடு பேசவும் இல்லை; பார்க்கவும் விரும்பவில்லை.

ஆனந்தன், கிழவரைப் பார்த்து, "என்ன தாத்தா; சௌக்கியமா?" என்று கேட்டான்.

அதைக் கேட்ட மாயாண்டி, "யாரப்பா? உன்னை எனக்குத் தெரியலியே!" என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

உடனே ஆனந்தன், அம்பலத்திடம் திரும்பி, "பார்த்தீங்களா! கிழவருக்கு என்னைத் தெரியலேங்கிறாரு! பெரிய இடத்துக்கு வந்தாலே கண்ணு தெரியாது போலிருக்கு. இருக்கட்டும்-இருக்கட்டும்; இந்தக் கிழவனை பிறகு விசாரித்துக் கொள்கிறேன்." என்று உறுமினான்.

மாயாண்டி, அம்பலத்தைத் தனியே அழைத்துப் போய், "இந்தப் பசங்கள் எல்லாம் துரையோட தோழர்கள்! இவர்களை ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்ள வேண்டும். இவர்களால் ஏதாவது ஆபத்து வந்தாலும் வரலாம்!" என்று எச்சரிக்கை செய்தார். அம்பலமும், ஆனந்தன் கோஷ்டியாரைக் கண்காணித்துக் கொள்ள ஒரு முரடனை நியமித்து விட்டுத் தன் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினார்.

வெளியூர்களிலேயிருந்தும் வெள்ளியம்பலம் வீட்டுக் கல்யாணம் விசாரிக்க மக்கள் திரளாகக் கூடினார்கள். மருங்கப்பள்ளத்திலே—தாண்டவன் வீட்டைத் தவிர, மற்ற யாருடைய வீட்டிலும் சமையலே கிடையாது. எல்லோருக்குந்தான் கல்யாண வீட்டிலே விருந்தாயிற்றே!

காலையிலே திருமணம்—மாலையிலே ஊர்வலம்—இரவு சோபன முகூர்த்தம்—அதோடு, திருமணத்தை முன்னிட்டு தெருக்கூத்து! ஊர் ஜனங்கள் எல்லாம் தெருக்கூத்திலேயிருந்து ரசித்துக் கொண்டிருக்கும்போது, இங்கே தம்பதிகள் கொலை! ரத்தத்தைக் கிணற்றிலே தெளித்தல்! புதையல் வெடித்துக் கிளம்புதல்!—இப்படித் திருமண நிகழ்ச்சிகளைத் திட்டவட்டமாக அமைத்துக் கொண்டார் அம்பலம்.

அதன்படி அதிகாலையிலே சாஸ்திரீய முறைப்படி திருமணச் சடங்குகள் ஆரம்பமாயின. புரோகிதரின் மந்திரங்கள் ஒலித்தன. மேளதாளங்கள், பாண்டு வாத்தியங்கள் முழங்கின. பரிமளா, மணக்கோலத்தோடு அழைத்து வரப்பட்டாள். இன்றிரவு பிணக்கோலமாகப் போகிறோம் என்ற நினைவோடு அவளும் வந்து மனையில் அமர்ந்தாள். தங்கச் சங்கிலிகள் கழுத்திலே மின்னிக் கொண்டிருந்தன. கல் இழைத்த ஒட்டியாணம் பூட்டப்பட்டிருந்தது. நாகர்—திருஉருவப்பூ—முதலிய தலையலங்கார ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டிருந்தன. அழகுக்கு அழகு செய்தது போன்ற நிலையில் அவள் உட்கார்ந்திருந்தாள். அவளது கண் எதிரே—தானும், தனது அத்தான் துரையும் துண்டாடப்படுவது போன்ற காட்சிதான் தெரிந்து கொண்டிருந்தது.

நாடகப் பெரும் பேராசிரியர்

தூ. தா. சங்கரதாஸ் சுவாமிகளின்
நினைவு நாள் விழா

கலைவாணர்

திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்கட்குப்
பொன்னாடை போர்த்தும் விழா

அழைப்பிதழ்

அன்புடையீர்!

வருகிற 13-11-55ம் நாள், ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு, சென்னை, மைலாப்பூர் ஆர். ஆர். சபா ஹாலில், காலஞ்சென்ற நாடகப் பெரும் பேராசிரியர் தூ. தா. சங்கரதாஸ் சுவாமிகள் நினைவுநாள் விழாவும் கலைவாணர் திரு. என். எஸ் கிருஷ்ணன் அவர்கட்குப் பொன்னாடை போர்த்தும் விழாவும் நடைபெறவிருப்பதால் தாங்கள் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

சென்னை
5-11-55

இங்ஙனம்,
தென்னிந்திய நடிகர் சங்கம்

சிறிது நேரத்திற்கெல்லாம் துரையும் ராமனால் அழைத்து வரப்பட்டான். விலை உயர்ந்த பட்டாடைகள் உடுத்தி மாப்பிள்ளைக்கோலத்திலே, அவன் பரிமளாவின் பக்கத்திலே அமர்ந்தான். மணமக்கள், மணவறையில் வந்து உட்காருவதை தூரத்தில் இருந்து பார்த்த மாயாண்டிக் கிழவர், அவர்கள் கண்ணில் படாமலே ஒதுங்கிக் கொண்டார்.

துரையும், பரிமளாவும் ஒருவரையொருவர் திகில் நிறைந்த கண்களோடு பார்த்துக் கொண்டனர். வரப்போகும் ஆபத்து, அத்தானுக்குத் தெரியுமோ என்னமோ என்று கலங்கிக் கொண்டிருந்தாள் அவள். ஏதோ ஒரு மர்மச் சுழலில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம்; பயங்கரமான விளைவை அனுபவித்துத்தான் தீரவேண்டும் போலும்—என்ற திடமான நம்பிக்கையிலே யிருந்தான் துரை. திருமணப் பந்தலிலேகூட இருவரும் தப்பி விடலாம், ஊரார் அறிய!—ஆனால் அவர்களைச்சுற்றி யார்இருக்கிறார்கள்? முரட்டு மீசையும், மிரட்டும்கண்களும் கொண்டோர்—பளபளப்பானகத்திகளோடு அல்லவா நின்று கொண்டிருக்கிறார்கள்! ஏன் இப்படி ஒரு படை நிற்கிறது என்று யார் கேட்பது? அப்படி யாராவது கேட்டாலும், தாண்டவனால் தம்பதிகளுக்கு ஏதாவது ஆபத்து நேரக்கூடும்; அதைத் தடுப்பதற்காக — என்று பதில் சொல்லிவிட்டுப் போகிறார் அம்பலம்! சுற்றிலும் வெறி நாய்கள் போல முரடர்கள் — எதிரிலே தவளைகள் போல மந்திர மொலிக்கும் புரோகிதக் கூட்டம்—வேடிக்கை பார்க்க ஊரார்—காதல் திருமணத்திலே அம்பலத்திற்குள்ள அக்கரை பற்றிப் பேசிடும் பலர்—இவர்களுக்கிடையே பரிமளாவும்—துரையும்!

'கெட்டி மேளம்! கெட்டி மேளம்!' என்று அய்யர்கள் அலற—மஞ்சள் தோய்ந்த அரிசியை ஊரார் மணமக்கள் தலையில் கொட்ட—பரிமளாவின் கழுத்திலே துரை தாலியைக்கட்டினான். தாலி—தானம்— தர்ப்பாசூரரின் தவளைச் சப்தம்-எதுவுமே பிடிக்காத துரை, எதுவுமே செய்ய முடியாத நிலையில் ஒரு யந்திரப் பொம்மைக்கு விசை முடுக்கி விட்டதைப் போல, அம்பலத்தின் இஷ்டப்படியெல்லாம் நடந்தான். இரவு சாகப் போகிற நமக்கு எந்தக் கல்யாணமாக இருந்தால் என்ன—என்று பரிமளாவின் இதயம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

திருமண வைபவத்தை, பந்தல் கீற்றின் இடுக்கின் வழியாக இரு கண்கள் பார்த்துக் கொண்டிருந்தன. பரிமளாவின் தாய்தான் அது! அவளது கண்களிலே புதிய ஒளியே பிறந்தது. 'பொருத்தமான ஜோடிதான்' என்று அவளையறியாமலே சொல்லிக் கொண்டாள். அந்தத் தாய், உள்ளத்திலேயிருந்து பொங்கி எழுந்த நல் வாழ்த்துக்களை அப்படியே கொட்டிவிட்டு, வீடு நோக்கி ஒளிந்து ஒளிந்து ஓடினாள்.

விருந்து முதலிய வைபவங்கள் தொடர்ந்தன. முன் இரவிலே—மணமக்களின் ஊர்வலம். ஒரு பழைய காரிலே மணமக்கள் அமர்த்தப்பட்டு, அதை முரடர்கள் தள்ளிக் கொண்டு ஊர்வலம் நடத்தினார்கள். அப்போதுகூட பரிமளாவும்—துரையும் ஒருவரையொருவர் கவலையோடு பார்த்துக் கொள்ள முடிந்ததே தவிர, பேசுவதற்கு வாய்ப்பில்லாமலே போய் விட்டது. தான் பிறந்து-வளர்ந்த ஊரைக் கடைசி முறையாகப் பார்க்கிறோம் என்ற எண்ணத்தோடு, அவள் ஊரைச் சுற்றி பார்வையை செலுத்தினாள்.

இளைஞன் துரையை அனைத்தைக் கோலத்திலே — அவள் முதன்முதலாக சந்தித்துப் பேசிய இடம்—அதைப் பார்த்தாள், காரில் இருந்தபடியே! கண்ணீர் பெருக்கெடுத்தது. அவள் குதித்து விளையாடிய தாமரைக் குளம்—காதலனைத் தழுவிக் கிடந்த கோயிலின் பக்கம்—எல்லாமே அவள் இருதயத்தின் கனத்தை அதிகப்படுத்தின. துரை, அடிக்கடி பரிமளாவைப் பார்ப்பதோடு—தங்களைச் சுற்றிவரும் முரடர்களையும் பார்த்துக் கொண்டான். தப்பியோடுவதற்கு ஏதாவது மார்க்கமிருக்கிறதா என்பதே அவன் யோசனை!

துரையின் நண்பர்கள் ஆனந்தன் முதலியோர் ஊர்வலத்திலே வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்காணித்தபடி ஒரு முரடனும் வந்து கொண்டிருந்தான். தெருக்கூத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க ராமன்பறந்துவிட்டான்.

ஊர்வலம் முடிவுற்றது. இரவு—மீன் விருந்து! அதன்பிறகு, தெருக்கூத்து! ஊரே அங்கு திரண்டு விட்டது.

துரையும், பரிமளாவும் சோபன அறைக்குத் தனித் தனியே அனுப்பப்பட்டனர். துரையைக் கண்ட பரிமளா, அவன்மீது பாய்ந்து தழுவிக் கொண்டு, "அத்தான்! அத்தான்!" என்று தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். துரையின் கண்களிலும் நீர் கலங்கியது.

[வளரும்]

நடுத்தெரு நாராயணி

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

என்ற நம்பிக்கையோடு, விட்டுக்குப் புறப்பட்டாள். அய்யரும், அந்தத் தையலின் கன்னத்தைச் சுவைத்த உதடுகளை கழுவாமலே ஆண்டவனுக்கு அர்ச்சனை மந்திரம் ஜெபிக்கக் கர்ப்பக் கிரகம் நோக்கி விரைந்தார்.

★

கோயில் பிரகாரத்திலே வாக்களித்த பிரகாரம், அய்யர் நாராயணியை எப்போதும் வைத்துக்காப்பாற்றுகிற அளவுக்கு அவள் விட்டிற்கே வந்து சேர்ந்தார்.

"கோயில் குருக்களுக்கு அடிச்சுதடா சான்ஸ்! கொய்யாப் பழமாக இருந்தாள் — அவளைக் கொய்து விட்டார் அய்யர். என்ன இருந்தாலும் அனுபவிக்கப் பிறந்த ஜாதியப்பா அது! எத்தனையோ பேர் நத்திக் கிடந்தார்கள்; எல்லோரையும் எட்டி உதைத்து விட்டு பூணூல் வலையிலே மாட்டிக் கொண்டது அந்தப் புள்ளி மான்! போகிறான் போ! அவனாவது சுவைக்கட்டும்!" — இளங் காளைகளிடத்திலே, இப்படிப்பொறாமை வடிவத்திலே ஆரம்பமான பேச்சு, விட்டுக் கொடுக்கும் தன்மையிலே முடிவு பெற்றது.

கடவுளின் பக்கத்திலே யிருந்து கடமைகளைச் செய்கிற மனிதர் மிகவும் நல்லவராக இருப்பார்; நம்பியவரைக் கைவிட மாட்டார்; அதிலும் பிராமணர் — புரண்டு பேச மாட்டார்; பொய் கூறுவது பாபமெனக் கருதுவார்; பரமசிவன் பக்கத்திலே பார்வதி போலத் தன்னையும் அருகே வைத்து ரட்சிப்பார் என்ற நம்பிக்கையிலேதான், நாராயணி, கோயில் குருக்களைத் தன் கணவனாக ஏற்றுக் கொள்ள முடிவு செய்தாள். கோயில் பிரகாரத்திலே—கர்ப்பக் கிரகத்தின் கிழக்குப்பட்டு இருண்டிருந்த இடத்திலே—இதழ்களைப் பரிமாறிக் கொண்டு—திரும்பி இல்லம் வந்தபிறகு, அன்றிரவு முழுதும் தூங்காமல் அவள் யோசித்ததின் முடிவு, குருக்களைத் தன் மணாளனாக ஆக்கிக் கொள்வது என்பதுதான்!

"ஏண்டி நாரா, கவலைப்படுறே! நான் பிராமணன்—நீ சூத்திரச்சின்னுதானே பாக்கிறே! பிராமணுளுக்குத் தலைவர் இருக்காரே: எங்க ராஜாஜி — அவர் மகளை காந்தி மகனுக்குக் கொடுக்கலே போ-ஜாதி ஆச்சாரம் பேசினாரே; என்ன ஆச்சு அது? அம்பேத்கார்னு ஒரு பறையன் — ஆதித்திராவிடர்னு சொல்லிக்குவா — அவரைக் கல்யாணம்பண்ணிண்டு இருக்கிறது யார் தெரியுமோ? எங்க ஜாதிக்காரி ஒருத்திதான்! ஜாதிஆச்சாரம் எங்கேடி போச்சு? ருக்மணிஅருண்டேல் சமாச்சாரம் தெரியுமோ நோக்கு! அடி அசடு-பித்துக் கோளி! சொல்றதைக் கேளுடி! பயப்படாதே! நான் உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்"—என்று கிருஷ்ணய்யர் பிரசங்க மொன்றே செய்தார்.

"ஜாதியாரெல்லாம் கல்யாணத்துக்கு வருவார்களா?" என்று கேட்டு வைத்தாள் நாராயணி.

"வர வேண்டாமே—நான் ஜாதியாருக்கு சொல்லப் போறதே இல்லை. நீ என்னோட சாயரக்ஷை கோயிலுக்கு வரவேண்டிடது; இதோ வாங்கி வச்சிருக்கேன் மாங்கல்யம்! ஆண்டவனுக்கு நேரா இதை உன் கழுத்திலே கட்டுவேன். நமக்கு மனுஷான்சாக்ஷி வேண்டாம்! தேவான் சாக்ஷி போதும் — ஆண்டவான் சாக்ஷி போதும்! என்ன சொல்றே?" என்று குழைவோடு கேட்டார் குருக்கள்.

மகேசன் சன்னிதானத்திலேயே தனக்குத் தாலிகட்டப் போகிறார் குருக்கள் என்ற செய்தி கேட்டு, நாராயணி குதூகலமடைந்தாள். அவள் கழுத்திலே தாலி மின்னியது. ஆனாலும் ஊரிலே பேசிக் கொண்டார்கள், கிருஷ்ணய்யர் நாராயணியை வைப்பாக வைத்திருக்கிறார் என்று! அப்படிப் பேசியவர்களிடம் அவரும் 'ஆமாம்' போட்டார். இப்படி ஊரார் பேசுவது, நாராயணி காதிலேயும் விழுந்தது. அவள் அவரிடம் முறையிட்டாள், 'என்னை உங்கள் 'வைப்பு' என்று சொல்கிறார்கள்' என்று!

"அட பித்து! 'வைப்பு' என்றால் ஏன் கோபப் படணும்! 'ஓய்ப்' என்ற இங்கிலீஷ் வார்த்தையை சொல்லத் தெரியாம, அவா 'வைப்' என்று சொல்றா! அவ்வளவுதான்!" என்று ஒரு போடு போட்டார் கிருஷ்ணய்யர்.

★ தொடர்ச்சி 9-ம் பக்கம்

எண்ணங்களை எழுதுங்கள்!

★ சென்ற ஆண்டு முரசொலி பொங்கல் மலர் எல்லா வகையிலும் சிறப்பு பெற்று, பொன் மலராகத் திகழ்ந்தது.

★ இந்த ஆண்டும்—மலரை திராவிடம் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறது என்பதை நாமறிவோம். அதன் சிறப்புகள் என்ன என்ன—என்ற விளக்கங்கள் தரத் தேவையில்லை யென்றே கருதுகிறோம்.

★ சென்ற மலரில் 'மணிமகுடம்' நாடகம் பாதியுடன் நின்றுவிட்டது, ஆசிரியர் உடல்நிலை பாதிக்கப்பட்டதால்!

★ அடுத்த பாதி, இந்த மலரில் தேவை யென்கின்றனர் சிலர்! தனிப் புத்தகமாகவே வரட்டும்; மலரில் வேண்டாம்—என்கின்றனர் சிலர்!

★ உங்கள் எண்ணமென்ன? எழுதுங்கள்! மற்றும், மலர் எப்படியெல்லாம் இருக்க வேண்டும்—என்ன விலையில் வெளியிடலாம்-என்ற விபரங்களையும் எழுதுங்கள்.

★ இயன்றவரை செயலாற்றுகிறோம்.

பொறுப்பாளர்,
பொங்கல் மலர்,
முரசொலி.

ரிக்ஷாக்களும் அரசாங்கமும்!

சென்னை-13
4-11-55

ஆசிரியர் அவர்களுக்கு,

ஆள் இழுப்பு சாதனங்களாகிய ரிக்ஷாக்கள், சைகிள் ரிக்ஷாக்கள், கால்நடை கட்டை வண்டிகள் போன்ற வாகனங்களை தடை செய்ய வேண்டுமென்றும், அதற்குப் பதில் புதிய அமைப்பு கொண்ட ஆட்டோ ரிக்ஷாக்களை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்றும், அண்மையில் சென்னை சட்டசபையில் முடிவு செய்யப்பட்டுள்ள உத்தியோகப் பற்றற்ற உத்தேச திட்டம் பெரும் ஏக்க உணர்ச்சியையும், அதிர்ச்சியையும் தருகிறது! மனிதத் தன்மைக்கு மாறான செயல் என்ற மனிதாபிமான உணர்ச்சியும், பரந்த பொது நோக்கமும்கொண்டு, ஆள் இழுப்பு வாகனங்களை தடைசெய்ய முன்வந்துள்ள அரசாங்கத்தை ஒரு பக்கம் பாராட்ட மனம் ஒருப்பட்டாலும்; மறுபக்கம் மருட்சியடையாமல் இருக்க முடியவில்லை! ஏனென்றால், அவர்களது பிற்கால நிலை, (மாஜி) மரமேறி தொழிலாளர்கள்—டிராம்வே தொழிலாளர்கள் — கைத்தறியாளர்களைப் போல 'நடுத்தெரு நாராயணன்'களாக ஆகிவிடுமோ என்ற சந்தேகம் மனதில் எழுந்த காரணத்தால்தான் அத்தகைய மருட்சி ஏற்படுகிறது!

ஆகவே ரிக்ஷாக்களை ஒழிக்க முனைவந்தால், சைகிள் ஓட்டும் தொழிலாளர்களையும், ரிக்ஷா, கட்டை வண்டிகளை இழுக்கும் தொழிலாளர்களையும், வேறு வேலைத் துறையில் கவனத்தை திருப்பி, வேலை கொடுத்து வாழ வழி செய்ய அரசாங்கம முன் வர வேண்டும் என்று எச்சரிக்க ஆசைப்படுகிறது, எதிர்காலத்தில் அவர்களை நோக்கிப் பாய நிற்கும் வறுமையும், பட்டினிச் சாவும்!

அன்பன்,
ம. செலவராசன்

★

மதவெறிக்கு மாணவர்கள் பலி!

நிலக்கோட்டை
30—10—55

ஆசிரியர் அவர்களுக்கு,

எம் மதமும் சம்மதம் எனக் கூறிய காந்தியப் பாதையில் செல்லும் மதுரை காங்கிரஸ் தோழர் ஒருவரின் தலைமையில் நடத்தப்படும் நிலக்கோட்டை, 'சாந்தி ஏழை மாணவர் உணவு விடுதி'யில் மதப் பூசலும், மூடநம்பிக்கையும் தாண்டவமாடுவது கண்டு வருந்துகிறேன்.

விடுதியில் உள்ள மாணவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களானாலும், வெள்ளிக் கிழமை தோறும் அவர்கள் இந்துமதக் குறி அணிந்து, வீதிகளில் பவனியாகச் சென்று, நகரத்தில்உள்ள இந்துமத ஆலயங்களை அடைந்து, வர்ணாசிரமப்படி சாமிகளை வணங்க வேண்டும் என்று கட்டாயப் படுத்தப் படுகிறார்கள். அதை மறுக்கும் மாணவர்கள் விடுதியை விட்டு வெளியேற்றப் படுகிறார்கள்.

அறிஞர்களால் புறக்கணிக்கப்பட்ட சாதி மதம் என்னும் சாக்கடையில் அமுகிக்கிடக்கும் வர்ணாசிரமத்தை வளர்க்க, மத சார்பற்ற சர்க்கார் என்று கூறும் இன்றைய ஆட்சியினர் ஆதரவு அளிப்பது வருந்தத்தக்கதே.

ஆகையால் இது போன்ற மத ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் மானியம் அளிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
இ. காத்தான்.

★

மொழியைக் காட்டி விழியை மூடாதீர்!

சமயநல்லூர்
28—10—55

ஆசிரியர் அவர்களுக்கு,

25—10—55 "தமிழ் நாடு" இதழில், மைசூர் மேல்சபையில் திரு பி. சிதாராமய்யா என்பவரால் 24—10—55-ல் ஒரு யோசனை தெரிவிக்கப் பட்டதாக செய்தி காணப்பட்டது.

அதாவது, வடநாட்டாரும், தென்னாட்டாரும் கலப்பு மணம் செய்து கொண்டால், இந்தி மொழியை தென்னாட்டார் சுலபமாகத் தெரிந்து பழகிவிடலாம் என்று கூறியிருக்கிறார்.

இது எப்படி யிருக்கிறதென்றால், ஆங்கிலேய ஏகாதிபத்தியம் அதனுடைய மொழியும், செல்வாக்கும், சுரண்டலும் நிலைத்திருக்க ஆங்கிலேயப் பெண்களை இந்தியர்கள் மணஞ் செய்து கொள்ளலாம் என்று எப்படி சூழ்ச்சித் திட்டம் போட்டு செயலாற்றினார்களோ அதே போன்றிருக்கிறது.

ஆங்கிலேயர்களின் அச் சூழ்ச்சியால் இந்தியா எப்படி அதனுடைய செல்வாக்கையும், செழிப்பையும், நாகரீகத்தையும் இழந்தது—இழந்திருக்கிறது என்பதையும், காங்கிரசாரே முன்பெல்லாம் மேடையிலேறிக் கூறியிருப்பதையும் மறந்து விட்டனர் போலும். இதை நினைக்கும்பொழுது சிரிப்புத்தான் வருகிறது!

மொழியைக் காட்டி நம் விழியை மூட நினைக்கும் ஆட்சியாளருக்கு இப்படிப்பட்ட யோசனைகள் தருவோர், 'தென்னகம் ஒரு தூங்கும் எரிமலை' என்பதை உணர வேண்டுகிறோம்.

அன்பர்கள்,
ஏழைப்பங்காளன்,
செல்லச்சாமி.

★

பண்பு துறந்த பதவிப் பித்தர்கள்!

காயாமொழி
2—11—55

ஆசிரியர் அவர்களுக்கு,

தற்சமயம் நகரசபை தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டு இருக்கின்றன. இத் தேர்தல்களில், சில நகரசபைகளில் காங்கிரஸ் கட்சியினரும், சில நகரசபைகளில் மற்ற கட்சியினரும் வெற்றி பெற்றிருக்கின்றனர். காங்கிரஸ் கட்சியினர் தாங்கள்வெற்றிபெறாத இடங்களிலெல்லாம், சுயேச்சையாளர்களின் உதவியைக்கொண்டு தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சி எடுத்து வருகிறார்கள். தன் கட்சியையே எதிர்த்து போட்டி யிட்டவர்களிடம் இவர்கள் இனிமையாகப் பேரம் பேசி, அவர்கள் ஆதரவைத் தேடுவது அவமானத்துக்குரிய செய்தியாகும். சுயேச்சையாளர்களும் தங்கள் சுயநலத்தையே நோக்கமாகக் கொண்டு காங்கிரசில் சேர்ந்து விடுகின்றனர், மந்திரிகள் மாணிக்க வேலரும், இராமசாமி படையாச்சியும் கற்றுத்தந்த பாடப்படி! இப்படிப்பட்ட மானங் கெட்ட செய்கைகள் செய்து கொண்டு காங்கிரசாரும், காங்கிரஸ் ஏடுகளும், தங்களுக்கு ஆதரவு அதிகம் இருப்பதாக விளம்பரம் செய்து வருகின்றனர். "வாழு—வாழவிடு" என்பது போல், மற்ற கட்சியும் நிர்வாகம் நடத்தட்டுமே—அந்தக் கட்சியின் நல்லவைகளையும் நாம் வரவேற்போம்—என்ற பெருந் தன்மை, சிறுமைக் குணம் கொண்ட ஆளும் கட்சியினரிடையே என்று தான் தோன்றுமோ தெரியவில்லை!

தங்கள் அன்புள்ள,
கே. எஸ். கேசவன்.

★

இராமாயணம், உயர் தமிழ்க் காவியமாம்!

சின்ன முதலியார் சாவடி
3—11—55.

ஆசிரியர் அவர்களுக்கு,

தமிழகத்தில் செத்துவரும் கம்யூனிசக் கொள்கைக்கு புத்துயிரூட்டும் பலனற்ற முயற்சிகள் பல நடைபெற்று வருகின்றன. அவைகளில் ஒன்றாக பொதுவுடமைக் கொள்கைகளைத் தாங்கி புதிய இரண்டெழுத்து பெயர் கொண்ட ஏடு ஒன்று பவனி வருகிறது.

அதன் 23-10-55 இதழில், முன் பக்கத்தில், "கம்பனும்—கல்லக்குடியும்" என்ற கட்டுரை வந்துள்ளது. அதில் நமது தலைவர்களைத் தாக்கி எழுதி யிருக்கிறது அந்தப் பத்திரிகை. எனினும் மு.க. மீதும், 'முரசொலி'யின் மீதும்தான் முக்கிய கோபம். இதற்குக் காரணம், 'ஜனசக்தி ஆபீஸிலுள்ள மார்க்சிய ஏடுகளை கரையான் அறிக்கிறது......ஜீவனற்ற ஜீவா கம்பராமாயண காலட்சேபம் செய்கிறார்' என்று 'முரசொலி' எழுதியதுதான். இதை வைத்துக் கொண்டுதான் குமுறி கொட்டி இருக்கிறது தன் ஆத்திரத்தை.

மார்க்ஸ் கூறினார், 'மதம் அபின்' என்று. இவர்களோ 'மதமா; அது எங்களுக்கு பாதம் அல்வாவாயிற்றே' என்று கூறி மதத்தை வளர்க்கிறார்கள். கல்லறை நோக்கி வேகமாக சென்று கொண்டிருக்கும் கம்பராமாயணத்திற்கு உயிரூட்ட நினைக்கின்றது இந்த உதவாக்கரை பத்திரிகை. ஒரு இடத்தில் எழுதுகிறது, 'வால்மீகியின் கதையை தமிழகத்துக்குரிய ரீதியில் தமிழ் காவியமாக படைத்தான் கம்பன்' என்று. இதன் அறிவு எத்தகையது என்று இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம், எது தமிழ் மரபு? பல மனைவியரை பெற்றிருந்தானுமே தசரதன், அது தமிழ் மரபா? அல்லது பேடித்தனமாக பின்புறமிருந்து தாக்கினானே ராமன், அது தமிழ் முறையா?

நாஸ்திகத்தை பற்றி நல்ல நூல் எழுதுவோர்க்கு பரிசுகள் வழங்க முன் வருகிறது ரஷ்ய அரசாங்கம். அதைப் பின் பற்றுகிறோம் என்று கூறும் இந்த மாஸ்கோ கூலிகள், மதத்தை காக்க புறப்பட்டதின் நோக்கம் என்ன?

அன்பன்,
கோ. கருணாநந்தம்

★

கடிதக் குறிப்புகள்.

தாமரைச் செல்வி(சென்னை-2) இரா. சிங்காரம் (சிங்கப்பூர்)—ஆகியோர் எழுதியுள்ள கடிதங்களில், 'கல் தோன்றி மண் தோன்றா காலத்து வாளொடு முன் தோன்றிய மூத்தக்குடி'யினராகிய தமிழர்கள், வெள்ளையருக்கும் நீக்ரோவுக்கும் பிறந்த கலப்பு இனத்தவர்; கரும் பழுப்பு நிறமுடையோர்—என்று சிகாகோ நகரில் உள்ள மனித வர்ணனைக் காட்சி தவறான விளக்கம் தந்திருக்கிறதே, அந்த இழிவினை அழிக்க தமிழர்கள் ஆவன செய்ய வேண்டும்—என குறிப்பிடுகிறார்கள்.

★

தோழர் ஏ. என். ஆர். சுவாமி (பம்பாய்–42) என்பவர் எழுதியுள்ள கடிதத்தில், பம்பாய் ஜோகேஸ்வரி பகுதியில் குடியிருக்கும் தமிழர்கள், அநாகரிகமாகவும் ஒன்றுமையற்றவர்களாகவும் வாழ்ந்துவருகிறார்கள்; அவர்களின் நலனுக்குப் பாடுபட சீர்திருத்த நோக்கம் கொண்ட இளைஞர்கள் துவக்கியிருக்கும் 'தமிழர் முன்னேற்ற மன்ற'த்தில் சேர்ந்து பணியாற்ற பம்பாயில் வாழும் மற்ற தோழர்களை அழைக்கிறார். மன்ற முகவரி; ஸ்கோர்டர்ஸ் காலனி, பம்பாய்–42.

'முரசொலி'

இலங்கைத் தோழர்களுக்கு:

ஆண்டு சந்தா	6–0–0
6–மாத சந்தா	3–8–0

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

ஆண்டு சந்தா	7-0-0
ஆறுமாத சந்தா	4–0–0

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.

நடுத்தெரு நாராயணி...

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

கணவனே தெய்வமென்று கருதிக் கிடக்கும் நாராயணியும் அந்தப் பேச்சையெல்லாம் அதிகமாக வளர்த்தாமல் அவரோடு சுமுகமாகவே பழகி வந்தாள்.

★

திடீரென்று ஒருநாள், வீட்டுக்கு வந்த அய்யரின் முகத்திலே சோகம் படர்ந்திருப்பதை நாராயணி கண்டாள். காரணம் கேட்டாள். கோயில் வேலையிலிருந்து தர்மகர்த்தா நரசிம்மநாயுடு தன்னை விலக்கிவிட்டார் என்று கூறினார் அய்யர்.

"ஏன்?" என்று துடித்தாள் நாராயணி.

"ஊரிலேயுள்ள பிராமணர்கள் எல்லாம் மாநாடு கூடினார்களாம். அதிலே, நான் கலப்புத் திருமணம் செய்துகொண்டு உன்னோடு வாழ்வதைக் கண்டித்தார்களாம். சூத்திரச்சியோடு வாழுகிறவன், கோயிலிலே சாமியைத் தொட்டு பூஜை செய்யக் கூடாது — என்று தர்மகர்த்தாவிடம் வல்யுறுத்தினார்களாம். அதனால், தர்மகர்த்தா என்னை விலக்கிவிட்டார்" என்றார் அய்யர்.

இப்படி ஒரு புரட்சிகரமான செய்தியைக் கேள்விப்பட்ட நாராயணி, கிருஷ்ணய்யரைக் கட்டிப் பிடித்தபடி, "பிராமணோத்தமரே! இந்த அனாதைக்காக—உங்கள் ஆச்சார அனுஷ்டானங்களையெல்லாம் எதிர்த்து நின்றதோடு இல்லாமல், சமூகத்தையும் துச்சமாக மதித்து, கோயில் வேலையையும் தியாகம் செய்துவிட்டீர்களே!" என்று கதறினாள்.

"நாராயணி! சிறுபிள்ளை மாதிரி அழுதுண்டு இருக்காதே! உனக்காக நான் எவ்வளவோ செய்திருக்கேன். அதுமாதிரி நீ எனக்காக எதுவும் செய்யத் தயாராயிருக்கணும்—அதுதான் எனக்குத் தேவை!" என்று சொல்லியபடி அவள் கூந்தலைக் கோதினார் அய்யர்.

"சுவாமி! தங்களுக்காக உடல்—பொருள்—ஆவி — மூன்றையும் தத்தம் செய்யத் தயாராயிருக்கிறேன்" என்று அவரது மடியிலே சாய்ந்து விக்கி விக்கி அழுதாள் அந்த விழியழகி!

'கிருஷ்ணய்யர் — நாராயணி' ஜோடியைப் பார்க்கும்போது, 'அய்யோ; இந்த யுவதிக்கு இந்த மனிதன் அவ்வளவு பொருத்தமில்லையே' என்று சொல்லத்தான் தோன்றும். 'கிளி மாதிரி இருக்கிறாள்-இவனோ எலி மாதிரி இருக்கிறான்' என்று விமர்சித்தவர்களும் உண்டு. 'பேரழகின் பிறப்பிடம் அவள்—இந்தப் பிராமணனோ அவளெதிரே விண்மீனுக்கு முன் மின்மினியாகத் தெரிகிறான்'—இப்படிப் பேசாதாரும் இல்லை. ஆனால், நாராயணியின் கண்களோ, இவைகளுக்கெல்லாம் விதிவிலக்கு. அவள் மனக்கண்களுக்குமுன்னே எல்லோருடைய விமர்சனமும் தவிடு பொடியாகிவிட்டது.

குலப் பெருமை இழந்தார்— கோவில் குருக்கள் என்ற மதிப்பை இழந்தார்-இவ்வளவும் தனக்காக! தன்னிடம் தந்த வாக்கை நிறைவேற்றுவதற்காக! — என நினைக்கும்போது, நாராயணிக்கு நேரே கிருஷ்ணய்யரின் உருவம்—கிருஷ்ண பகவானின் உருவம் போலவே தோற்றமளித்தது. "கண்ணா, மணி வண்ணா!" என்று அவள் பாடாததுதான் பாக்கி. அவ்வளவு பக்தியும் பாசமும் புருஷன்மீது ஏற்பட்டு விட்டது அவளுக்கு!

குஷ்டரோகிக் கணவனைத் தாசியின் வீட்டுக்குத் தூக்கிச் சென்ற நளாயினி—'தேவலோகத்து மாதர்கள் கற்பரசிகளாய் இல்லாத போது, பூலோகத்திலே மட்டும் கற்பரசிகள் இருக்கலாமா? அவர்களை சோதிப்போம்' எனத் தோள் தட்டிப் புறப்பட்டு, நிர்வாணமாக வந்து சோறு பரிமாறச் சொன்ன மும்மூர்த்திகளை குழந்தைகளாக மாற்றி, நிர்வாணக் கோலத்தோடு அன்னமிட்ட அனுசூயா—இத்தகைய பத்தினிகளையெல்லாம் தோற்கடிக்கும் அளவுக்கு பதி சொல் தட்டாத பாவையாக நடந்துகொள்ள வேண்டுமென்று நாராயணி ஆசைப்பட்டாள். அவளது பதிபக்தியைப் பார்த்து ஊரே ஆச்சரியப்பட்டது.

★

கோயில் வேலையிலிருந்து நீக்கப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஒருநாள் இரவு கிருஷ்ணய்யர் அவசர அவசரமாக வீட்டுக்கு ஓடி வந்தார். அவரது உடலெங்கும் வியர்வைத் துளிகள். மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியபடி "நாராயணி! நாராயணி!" என்று அலறினார்.

அவளோ, "என்ன? என்ன?" என்று கேட்டபடி, சின்ன இடை நெளிய ஓடிவந்தாள், பள்ளியறையிலிருந்து!

அய்யர், பிரக்ஞையற்ற நிலையில் நின்று கொண்டு பிதற்றினார்.

"நாராயணி! நோக்காக நான் எவ்வளவு தியாகம் செய்திருக்கேன்?"

"ஆமாம்; அதற்கென்ன இப்போது?"

"ஞாபகமிருக்கா? நேக்காக நீ உடல்-பொருள்-ஆவி மூன்றையும் தியாகம் செய்வேன்னு சொன்னியே!"

"ஆமாம்; சொன்னேன் — இப்போதும் சொல்கிறேன்!"

"நாராயணி! ஆபத்து வந்துவிட்டதடி! நீ, ஆவியையும் பொருளையும் தியாகம் செய்யத் தேவையில்லை. உடலை மட்டும் தியாகம் செய்; போதும்!"

"என்ன சொல்கிறீர்கள் சுவாமி?"

"ஆமாண்டி கண்ணே! என் உயிரைக் காப்பாற்ற வேணும்னா, நீ உன் உடலைத் தியாகம் செய்யத்தான் வேணும்!"

"புரியவில்லையே!..."

"தர்மகர்த்தா நரசிம்ம நாயுடு இருக்காரே; அவருக்கு உன் உடலை..."

அய்யர் வாய் மூடவில்லை. அதற்குள் நாராயணி மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தாள்.

(அடுத்த இதழில் முடியும்.)

தோழர் வ. வீராசாமி பி.ஏ., எம்.பி.,

அவர்கள்,

எஸ். ஆர். எம். யு.வின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகுவதற்குக் காரணம் காட்டுகிறார்.

(எஸ். ஆர். எம். யு. தலைவர் எஸ். இராகவானந்தத்திற்கு எழுதிய கடிதத்தின் நகல்)

அன்புள்ள தோழருக்கு,

கீழ்கண்ட காரணங்களுக்காக நான் எஸ். ஆர். எம். யு. வின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும், "தொழில் முரசு" ஆசிரியர் பதவியிலிருந்தும் விலகிக் கொள்ளுகிறேன். என் விலகலை ஒத்துக் கொள்ளும்படி பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

நான் விலகிக் கொள்வதின் காரணங்களாவன:

1. தென்னாட்டில் ஒரு சுதந்தர ஜனநாயக தொழிற் சங்கம் அமைய வேண்டும் என்ற கருத்துடன், சிறந்த கொள்கைகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தென்பகுதி ரயில்வேமென் யூனியன் அது எந்தக் கருத்துடன் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த வகையில் ஆரம்பத்திலிருந்தே இயங்கவில்லை.

2. மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்களில் சிலர் தங்கள் இஷ்டம்போல் காரியங்களை செய்து, இந்த யூனியன் வளராமல் செய்ய எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்கிறார்கள்.

3. யூனியனுடைய கொள்கைகளை சரியாகப் புரிந்துகொள்ளாததினாலோ, அல்லது தவறாகப் புரிந்துகொண்டதினாலோ யூனியன் அங்கத்தினர்களுக்குள் வேற்றுமை அதிகரித்துள்ளது. பொன்மலை கிளை, திருச்சி கிளை, மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்களில் சிலர்—ஆகியோருடைய சுயநலத்தாலும், கர்வத்தாலும் யூனியன் அங்கத்தினர்களுக்குள் அதிருப்தி, ஒற்றுமையின்மை, கருத்து வேற்றுமை உண்டாகிவிட்டது.

4. இவர்களுடைய நடத்தை அங்கத்தினர்களுடைய சிதான மனோநிலையை குலைத்துவிட்டதுடன், யூனியன் வளர்ச்சிக்கும், அதிகப்படி அங்கத்தினர்கள் சேர்ப்பதற்கும் பாதகம் உண்டுபண்ணிவிட்டது.

5. கூட்டுப் பொதுச் செயலாளர் (ஏ. கே. சச்சிதானந்தம்) என்னைக் கேட்காமல் கிளைகளுக்கு சர்குலர் அனுப்புவதும், கடிதங்கள் எழுதுவதுமான செயலில் ஈடுபட்டு சர்வாதிகார முறையில் காரியங்கள் செய்கிறார். அப்படி அவர் செய்யக் கூடாதென்று அவரை நான் எழுத்து மூலம் வேண்டிக் கொண்டும், அவர் யூனியன் சட்டத்திற்கு விரோதமானதும் யூனியனுக்குக் கேடு பயக்கும் நடவடிக்கைகளையும் செய்து வருகிறார்.

6. "தொழில் முரசை" ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தோழர்களுக்கு முன்அறிவிப்பு கொடுக்காமலும், நியாயமான காரணமில்லாமலும் அது வெளியிடாமல் நிறுத்தப்பட்டுவிட்டது.

அன்பார்ந்த தலைவர் அவர்களே,

நான் எந்த யூனியனில் ஆரம்பத்திலிருந்து உழைத்து வருகிறேனோ அதில் இம்மாதிரி போக்கையும், கட்டுப்பாடின்மை, கர்வம், கீழ்தரமான சுயநலம், ஆகியவைகளை யூனியனில்உள்ள யார் செய்தாலும் அதை நான் பொறுக்க முடியாதென்பதை தெரிவித்துக் கொள்வதுடன், நீங்களும் இதை ஏற்றுக் கொள்வீர்களென நம்புகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக நான் மேலே குறிப்பிட்ட குறைகளை அகற்ற எவ்வளவோ முயற்சி செய்தும், சில அங்கத்தினர்களுடைய நடத்தையால் என் மனதிற்கு திருப்தி ஏற்படும் அளவிற்கு நான் வெற்றியடைய முடியாமற் போய்விட்டபடியால், பொதுச் செயலாளர் பதவியின்றும் "தொழில் முரசு" ஆசிரியர் பதவியிலிருந்தும் நான் விலகிக் கொள்ளுகிறேன்.

ரயில்வேத் தொழிலாளர்களுடையவும் யூனியனுடையவும் நன்மையையே பெரிதாகக் கருதி உழைக்கும் உங்களுக்கும், உங்களுடன் ஒத்துழைக்கும் அங்கத்தினர்களுக்கும் என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்னிடம் காட்டிய அளவு கடந்த அன்பிற்கும் என் நன்றி. மத்திய நிர்வாகக் குழுவிற்கும், கிளைகளுக்கும் என் நன்றியைத் தெரிவியுங்கள்.

என்னிடம் படிப்பகம் அமைப்பதற்காக கொடுக்கப்பட்ட ரூ. 75 உள்ளது. அதை விரைவில் உங்களுக்கு அனுப்புகிறேன்.

உங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்) வ. வீராசாமி.

17-10-55

நகல்—1. கூட்டுப் பொதுச் செயலாளர்

2. பயில்.

புல்கானின் பார்வைக்கு...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

ஐம்பத்தி ஐந்து வரிகள் விதிக்கப்பட்டு வந்தனவாம். நிலத்துக்கு; நீருக்கு; வீட்டிற்கு; குழந்தை பிறப்பிற்கு; கால்நடை வளர்ப்புக்கு; சந்தைக்குச் செல்வதற்கு; சாலையிலே பிரயாணம் செய்வதற்கு; அடுப்பெரிப்பதற்கு—இதற்கெல்லாம் மக்கள் வரிகொடுக்கவேண்டும்.

1917—நவம்பர் 7-க்குப் பிறகு அந்த ஐம்பத்தைந்து வரிகளும் இருந்த இடம் தெரியவில்லை; அவைகளையெல்லாம் ஆழக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, இன்று புல்கானின் பவனி புறப்பட்டிருக்கிறார்!

புரட்சிக்கு முன்னால் டர்க்மேனியா பகுதியில் 99.3 சதவீதத்தினர் கல்வியறிவு இல்லாதவர்கள்! டஜிகிஸ்தான் பகுதியில் 99.5 சதவீதத்தினர் எழுதப் படிக்கத் தெரியாத தற்குறிகள்—இந்த அவமானத் தன்மை மக்களிடமிருந்து அழிக்கப்பட்டுவிட்டது. அந்த அற்புதம் நடைபெறுவதற்கு ஆவன செய்த நவம்பர் 7—கடந்த முப்பத்தேழு ஆண்டுகளாக தேசியத் திருநாளாக இருந்து வருகிறது, ரஷ்யாவில்!

அந்த நவம்பர் 7-ஐ வெற்றிகரமாக முடித்த புல்கானின், சென்னையில் நடைபெறப் போகும் நவம்பர் 14-ஐயும் பார்வையிடட்டும்.

பசியால் மக்கள் சுடுகாட்டுக்குச் சென்றபடி இருக்கிறார்கள். கிண்டியிலே புஸ்வாணம் கொளுத்துகிறார் ராஜேந்திரர்!

கோழிக் கோட்டிலிருந்து வடக்கே எட்டு மைலில்உள்ள மக்கா என்ற கிராமத்தில், டி. பாபுட்டி என்ற அறுபது வயதுக் கிழவன் பசிக்கொடுமை தாங்கமாட்டாமல், 8—வயது, 6-வயது கொண்ட இருதங்கப் பதுமை போன்ற குழந்தைகளை கிணற்றிலே தள்ளிக் கொன்றுவிட்டு. தானும் தூக்கிட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டிருக்கிறார், சென்ற கிழமை!

வயிற்றுப் பசியை அடக்க சாவிலே மருந்து காணுகிறார்கள் மக்கள். இந்தக் கொடுமையைத் தடுக்க முடியவில்லை—வாணவேடிக்கை நடத்தி வரிப் பணத்தை விரயமாக்குகிறார் ராஜாங்கத்தின் தலைவர்!

சென்னையிலே அறுபது வயதுக் கிழவனின் பிரேதம் எரிகிறது; கிணற்றுக்குப் பக்கத்திலே இரு பாலகர்களை நிறுத்தி வைத்து, "பாவியின் வீட்டில் பிறந்து 'பசி, பசி' என்று கதறிய குழந்தைகளே! அதோ கிணற்றுக்குக் கீழே புதைத்து வைத்திருக்கிறேன் உங்கள் பசி தீர்க்கும் பண்டம். போய்ச் சாப்பிடுங்கள்" என்று சொல்லிக் கொண்டே அந்தக் கிழவன் கிணற்றிலே தள்ளிக் கொன்ற குழந்தைகளின் சடலமும் கொழுந்துவிட்டு எரிகிறது—அதற்குப் பக்கத்திலேயே ராஜேந்திரர் கொளுத்தும் பட்டாசுகளும், பூத்திரி வகையறுக்களும் எரியப் போகின்றன!

புல்கானின் வரட்டும். பட்டினியால் செத்துப் போன பிரேதங்கள் எரியும் வேடிக்கையும், பிரசாத் நடத்தும் வாண வேடிக்கையும் நடந்த இடங்களைப் பார்க்கட்டும். புல்கானினை வரவேற்க வாழ்த்து மடல் தயாரித்துக் கொண்டிருக்கும் பாரத வீரர்களே! அவருடைய பார்வைக்கு அந்த இருவித சாம்பலையும் சேகரித்து வையுங்கள்.

அறுபது வயதுக் கிழவரும், அவருடைய இரு குழந்தைகளும் சாம்பல் வடிவத்திலே புல்கானினோடு பேசட்டும். அதைக்கேட்டு அவர் கண்ணீர் மழை பொழியட்டும்!

அதே சமயம் வாண வேடிக்கையிலே கிடைத்த சாம்பல் வர்ண ஜாலங்களைக் கொட்டட்டும்! அதைக் கண்ட புல்கானின் அழுகிப்போன இவர்களது ஆட்சிமுறையைப் பார்த்துக் காரித் துப்பட்டும்!

எரிமலையிலே குளிர் காயும் குள்ள நரிகள்; புயல் வீசும் போது பட்டம் பறக்கவிடும் பித்தர்கள் இன்னும் இங்கேயிருந்து கொண்டிருப்பதை அவர் புரிந்து கொள்ளட்டும்!

— மாறன் எம். ஏ.

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

நிறுத்திவிட்டாய் என்று கேள்விப்பட்டதும் என் மனம் எப்படித் துடித்தது தெரியுமா? நீ பணமின்றிக் கஷ்டப்படுவாயென்று அப்பாகிட்டே கெஞ்சிக் கூத்தாடி பத்து ரூபாய் வாங்கிக்கொண்டு புறப்பட்டேன்... அதைத்தான்... அந்தப் பகல் கொள்ளைக்காரன்... சந்திரா!...நான் என்னடி செய்யட்டும்? உதவி செய்ய வந்தேன்... அந்த உதவாக்கரை கெடுத்துவிட்டானே...உருப்படுவானா அவன்?"

"போதும் கலா! திட்டாதே!... இல்லாதவன் செய்திருப்பான்... விட்டுவிடு..."—தங்கைதான் இப்படிப் பேசினாள், தழதழத்த குரலில்!

'ஐயோ' என்று வாய்விட்டு அலற வேண்டும்போலிருந்தது அன்பனுக்கு. அடக்கிக் கொண்டான். ஆனால்...அழுதான்; குரல் எழும்பாது குலுங்கிக் குலுங்கி அழுதான். அந்தப் பெண் சந்திரா குடிசையை விட்டுப் புறப்படும் வரை மறைந்தே நின்றான்.

★

தங்கை பிழைத்துவிட்டாள். ஆனால் அண்ணனே எதையோ பறிகொடுத்தவனைப் போல ஏங்கிக் கொண்டிருந்தான். தங்கைக்கு வருத்தம் — குழப்பம்! ஆனால் அவளுக்கு எப்படித் தெரியும், தன் அன்பு அண்ணன் தான் செய்துவிட்ட ஒரே ஒரு குற்றத்திற்காக புழுங்கிச் சாகிறான் என்பது! தவறு செய்த அன்பனைத் தண்டிக்க ஆண்டவன் வரவில்லை. அவனது 'மனசாட்சி'தான் தண்டனை கொடுத்துக்கொண்டேயிருக்கிறது!

—சொர்ணம்

திராவிட மாணவர் முன்னேற்ற கழக

2-வது மாநில மாநாடு

சென்னையில் டிசம்பர் திங்களில் கூடுகிறது.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் புது முறுக்கோடு—மறுமலர்ச்சியுடன் பணியாற்ற வேண்டிய கட்டம். அதற்கு வேண்டிய திட்டத்தைத் திறமையோடு தீட்டவும், தியாகத் தீயில் குளிக்கவும் நம்மிடையே உள்ள தீரர்கள் ஏராளம்.

மாணவர் மாநாட்டிற்கு வரவேற்புக் குழு அமைக்கும் வாய்ப்பினை சென்னை திராவிட மாணவர் பெற்றிருக்கின்றனர்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநில மாநாட்டு வரவேற்புக் குழு, சென்னை—இராயபுரம் 'அறிவகத்'தில், 13—11—55 காலை 10 மணிக்கு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் பணியில் அக்கரை கொண்டோர்—அன்பு கொண்டோர், அத்தனை மாணவரையும் 13-ந் தேதி காலை 10 மணிக்கு 'அறிவகத்'திற்கு வருகை தருமாறு வேண்டிக் கொள்கிறேன்.

எல்லாக் கல்லூரிகள் பட்டப்படிப்பு—உயர்நிலைப் பள்ளிகள், தொழிற் கல்லூரிகள் (சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி போன்றவைகள்) அனைத்தும் குறைந்தது 2 பிரதிநிதிகளையாவது அனுப்பி, மாணவர் கழகம் வலிவும் பொலிவும் பெற சருசதுக்கள் நல்கி ஒத்துழைக்க அருள்கூர்ந்து வேண்டுகின்றேன.

13--11--55 ஞாயிறு காலை 10 மணி

'அறிவகம்'—இராயபுரம்—சென்னை.

திராவிட மாணவர்கள் நமது விடுதலைப் பட்டாளத்தின் முதல் வரிசையினர்!
அந்தப் பெருமைக்கேற்ற வெற்றி நம்மிடம் உண்டு என்பதை நிரூபிக்கத் தவறாதீர்!

அன்பன்,

கே. ஏ. மதியழகன்

மதுரை

12-11-55 மாலை 6-மணிக்கு, அண்ணா திடலில் நடைபெறும் திராவிட மாணவர் முன்னேற்ற கழக நான்காவது ஆண்டு துவக்க விழாவில், தோழர் நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் பேசுவார். மதுரை நகர சபை உறுப்பினர் முத்து அவர்களுக்கு பாராட்டுரை வழங்கப்படும்.

மேட்டூர் அணை

13-11-55 ஞாயிறு மாலை 8-30 மணிக்கு, பொதுஜன சேவா சங்க மைதானத்தில், தோழர் எம். என். வெங்கடாசலம் அவர்கள் தலைமையில், தோழர்கள் கோவை செழியன், க. கு. சின்னசாமி, அ. பாலு—ஆகியோர் பேசுவர்.

21-11-55 திங்கள் இரவு 9-30 மணிக்கு, மேட்டூர் அணை கமலா பள்ளி முன்புள்ள மைதானத்தில், துரைராசு நினைவு அரங்கில், பாண்டியன் நாடக மன்ற நிதிக்காக, மன்றத்தினரால் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில், 'பரபிரம்மம்' நாடகம் நடிக்கப்படும்.

சென்னிமலை

14-11-55 திங்கள் மாலை 6-30 மணிக்கு, குமரன் சதுக்கத்தில், பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார்.

குறும்பலாப்பேரி
(தென்காசி மாவட்டம்)

14-11-55 திங்கள் இரவு 8-மணிக்கு, தோழர் வே. பொ. தங்கம் அவர்கள் தலைமையில், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசுவார்.

கடியாபட்டி

26-11-55 சனி மாலை 5-மணிக்கு, ஆ. பெ. பிள்ளையார் கோவில் எதிரில், "குறள் விழா" நடைபெறும், திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில், பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார்.

பெயர்சூட்டு விழா

சென்ற 31-10-55 அன்று, திருவண்ணாமலை எஸ். ஆர். எம். யு. செயலாளர் தோழர் சி. குப்புசாமியின் பெண் மகவுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் "தமிழ்ச் செல்வி" என்று பெயரிட்டார்.

★

தோழர் கோவிந்தசாமி

தொண்டை நோய் காரணமாக ஸ்டான்லி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்த தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள், உடல் நலம் பெற்று சென்ற 5—11—55—அன்று இல்லம் திரும்பினார். ஓய்வு அவசியம் என மருத்துவர்கள் கூறியுள்ளபடியால், அவர் தற்போது கடலூர் சென்றிருக்கிறார்.

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

சிறுகதை

★ மனசாட்சி ★

அன்பன் நடந்துகொண்டிருந்தான். இல்லை; காற்றுதான் அவனைத் தள்ளிக்கொண்டு சென்றது. அவன் என்ன காகிதமா, காற்றில் பறக்க என்று கேட்கிறீர்களா? காகிதமல்ல; ஆனால் காகிதத்தைப்போல் லேசானவன். வறுமையும் பசியும் அவனை அத்தனை மெல்லிய உருவமாக ஆக்கிவிட்டிருந்தது. அவனது உடல்தான் லேசானது; ஆனால் உள்ளத்திலே அப்போது புகுந்துகிடந்த 'பாரம்' எவ்வளவு தெரியுமா? தெருவிலே எறும்பு ஊர்வலம்போல் ஊர்ந்து செல்லும் மோட்டார்களையும், அதிலே உல்லாசப் பயணம் நடத்தும் சீமான்களையும் பார்க்காமல், எங்கேயோ தன் நீர் நிறைந்த கண்களைத் திருப்பிக்கொண்டிருக்கிறானே, அவனது உலர்ந்துபோன உதடுகள் அசைகின்றன, கவனிப்போம்:

"ஐயோ, நான் என்ன செய்வேன்? ஆண்டவனே!... அப்பாவையும் அம்மாவையும் பிடுங்கிக் கொண்ட நீ, என் தங்கையை மட்டும் ஏன் விட்டுவைத்தாய்? அவள்மேல் எனக்கு அன்புபிறக்க ஏன் வழி செய்தாய்?... இன்று சாகக் கிடக்கும் அந்த தங்கத் தங்கையைக் காப்பாற்ற வழியின்றி துடிக்கிறேனே நான்..."

அன்பன் ஆண்டவனை அழைத்தான்; அழுதான்; பைத்தியக்காரன்! கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர ஆண்டவன் என்ன, அண்டை வீட்டுக்காரனா? கல்நெஞ்சம் கொண்ட கொடியோரின் மனமாவது கணநேரம் இளகுமே; ஆனால் கற்களாக நிற்கும் கடவுள்கள் அறிவைக் காவு கொள்ள மட்டும் தானே செய்வார்கள்! அந்தக் கடவுளிடம் காசுக்குக் கையேந்தினால் கிடைக்கவா செய்யும்? பாவம், அவனுக்கு பணம் தேவை! மருத்துவருக்குப் பணம்தந்து அவரிடமிருந்து மனிதாபிமானத்தை விலைக்கு வாங்க வேண்டும்! பிறகுதான் அவனுக்கு தங்கை கிடைப்பாள்! என்ன செய்வான்? கால்போன போக்கில் நடந்தான்; மனம் போன போக்கில் புலம்பினான்; அழுதான், முகத்தை மறைத்துக் கொண்டு!

"அயன்புரத்துக்கு இங்கேயிருந்து என்ன நம்பர் பஸ்?"—அவனைப் பார்த்துத்தான் யாரோ கேட்டார்கள். அப்போதுதான் அவன் சைனு பசார் பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருப்பதை உணர்ந்தான். ஒரு தங்கை—பணக்கார வீட்டுப் பெண் போலும்; அழகாக உடை அணிந்திருந்தாள். அவள் தான் கேட்டாள் அப்படி!

"அயன்புரத்துக்கா? 26-ம் நம்பர் பஸ்!..."—அன்பனின் குரலே எழும்பவில்லை; எனினும் பதில் சொன்னான்.

தங்கை பஸ்ஸின் வரவை எதிர்நோக்கி நின்று கொண்டிருந்தாள். சாதாரணமாக அல்ல; படபடப்புடன்! அவள் கண்கள் அடிக்கொருமுறை பஸ் வரும் திசையைப் பார்த்துப் பார்த்துத் திரும்பின. அவசரமாகப் போக துடித்தாள் அவள். "ச்சு...ச்சு... என்ன இன்னும் காணும்...என் அவசரம் தெரியாத பொல்லாத பஸ்..." என்று சபித்தாள். இப்போது அவள் முகத்திலே அவசரமும், குழப்பமும், 'காலதாமதத்தால் என்ன நேருமோ?' என்ற பீதியும் கலந்து அவளை நிற்கவிடாமல் அடித்தன. இங்கு மங்கும் நடை போட்டாள்

பஸ் நிலையத்தை ஒட்டி வானளாவ நின்று கொண்டிருந்த ஹைகோர்ட் கட்டிடத்தின் வாசல் கம்பிக் கதவில் சாய்ந்து கொண்டிருந்த அன்பன், இதை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தான். அப்போது, திடீரென்று அவன் கண்கள் அகல விரிந்தன. என்ன நடந்தது? அந்தப் பெண்ணின் கையிலிருந்து ஏதோ நழுவி விழுந்தது. அவள் கவனிக்கவில்லை. ஆனால் அன்பன் கூர்ந்து கவனித்தான். அவனது பஞ்சடைந்த கண்கள் அது ஒரு பத்து ரூபாய் நோட்டு என்பதை கண நேரத்தில் கண்டு பிடித்துவிட்டன. மறுகணம் அவன் மனதிலே ஏதோ ஒரு எண்ணம் மின்னல் போல் தோன்றியது.

மெதுவாக அடியெடுத்து வைத்தான். "அன்பா! என்ன இது இழி செயல்? வேண்டாம், நகராதே நிற்குமிடத்தைவிட்டு!..." இப்படி எச்சரித்தது, அவன் இதயத்திலே எங்கோ ஒரு மூலையில் முடங்கிக் கிடந்த மனசாட்சி!

அவன் என்ன செய்வான்? அடுத்த வினாடி அவனது மனக்கண்முன்னே, 'அண்ணா; அண்ணா!' என்று பிதற்றித் துடிக்கும் தங்கை—'பணம் கொடு, இல்லையேல் தங்கை பிணமாவாள்' என்று இரும்புக் கைகளை நீட்டி நிற்கும் மருத்துவர்—'இதோ இருக்கிறேனே, நீ தேடி அலைந்த பணம்' என்று சொல்லாமல் பாதை ஓரத்திலே கிடக்கும் பத்து ரூபாய்—இவை தோன்றித் தோன்றி மறைந்தன. கடைசியில் தங்கையின் பாசம், அந்த சிங்கத் தம்பியை...எப்படிச் சொல்வது? செய்யத் தகாத செயல் ஒன்றை செய்யத் தூண்டியது!

ஹைகோர்ட்டை நிமிர்ந்துபார்த்தான். 'நீதி—நேர்மை இவை என்றும் உயர்ந்தது' என்று கண்டித்துக் கூறுவதைப்போல உயர்ந்து நின்றது கலங்கரை விளக்கு! அவன் மெதுவாக நடந்தான். ரூபாய் நோட்டு கிடந்த இடத்தை நெருங்கினான். தெருவை கவனித்தான். 'தானுண்டு; தன் வேலை உண்டு' என்ற எண்ணத்தோடு கூட்டம் கூட்டமாக சென்று கொண்டிருந்தனர் மக்கள். அவர்களுக்கு மத்தியிலே அவன் இந்த விபரீதத்தைச் செய்யத் துணிந்தான்.

'குபீர்' என்று குனிந்தான். பணத்தைக் 'கப்' பென்று பற்றினான். ஆனால்...எந்த சந்தர்ப்பம் அவனை இந்த சதிக்குத் தூண்டியதோ—அதே சந்தர்ப்பம் அவனைக் காட்டியும் கொடுத்துவிட்டது. "ஐயோ....என்பணம்....பணம்!" என்று கத்தினாள் அந்தத் தங்கை. ஆமாம்; அப்போதுதான் அவள் தன் கையிலிருந்த பணம் காணாததை உணர்ந்தாள். அது மாற்றானின் கையில் சிக்குவதையும் கண்டாள்.

அன்பன் இதை எதிர்பார்க்கவில்லை. ஓடினான். தலைதெறிக்க ஓடினான். "திருடன்...திருடன்..." என்று அந்தத் தங்கை மட்டுமே அலறினாள். அவளுக்கு உதவி செய்ய—அன்பனைத் துரத்திச் சென்று பிடிக்க—அத்தனை பெரிய கூட்டத்தில் யாரும் முன்வரவில்லை. அன்பன் ஓடினான். இரைக்க இரைக்க ஓடினான். ஓடிக்கொண்டேயிருந்தான்!

★

மருத்துவர் தந்த மருந்துடன் தன் குடிசை வாசலை நெருங்கினான் அன்பன். வேகவேகமாக! தங்கை பிழைத்துவிடுவாள் என்ற மகிழ்ச்சி அவனுக்கு புது வேகத்தைத் தந்தது.

ஆனால்?... குடிசை வாசலை அடைந்ததும் அவன் திடுக்கிட்டு நின்றான். உள்ளே பேச்சுக்குரல் கேட்டது. யாரது? இந்த ஏழையின் குடிசையைத் தேடிவந்து பேசும் நல்ல இதயம் கொண்டோர் யார்? கூர்ந்து கேட்டான். ஒரு குரல்—பெண் குரல்—எங்கேயோ கேட்ட குரல்...

"அயோக்கியன்...அற்பன்... திருட்டுக் கழுதை... கேள் சந்திரா... உனக்கு உடம்பு சரியில்லை—பள்ளிக்கு வருவதை

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

உங்களுக்குத் தெரியுமா, தீபாவளிக் கதை?

அந்தக் காலத்திலே ஒரு அரக்கன் இருந்தான். இரண்யாட்சதன் என்று பெயர். அவன் உலகத்தைப் பாயாகச் சுருட்டிக் கொண்டான்...!

★★ கவனம்—கவனம்—உலகம் உருண்டை! இது உலக மேதைகளின் முதல்தர கண்டுபிடிப்பு! பூகோளம் புகட்டும் உண்மை! நீங்கள் தினம் படிக்கும் பாடம்! அதைச் சுருட்டமுடியுமா, பாயாக?...

அப்புறம்...அந்த சுருட்டிய உலகத்தை என்ன செய்தான் தெரியுமா? அதை எடுத்துக் கொண்டு கடலுக்குள் போய் ஒளிந்து கொண்டான்.

★★ நன்றாக கவனிக்கவும்—உலகத்திலே ஒரு பகுதி தான் கடல்! ஆனால் இந்தக் கற்பனைக் கடல் எங்கிருந்து வந்தது?... மேலும் கடலுக்குள் எவ்வளவு நேரம் இருக்க முடியும்? மூச்சுத் திணறாதா? மரணம் நேராதா?

அதைக் கேட்ட மகாவிஷ்ணு கோபம் கொண்டார்; உடனே 'பன்றி'யாக உருவம் எடுத்தார்!...

பன்றி கடலுக்குள் புகுந்தது; அரக்கனைக் கொன்றது; பூமியை மூக்கிலே தூக்கி வந்தது!

★★ மூக்குக்கு அத்தனை பலமா? பதில் தேடாதீர்கள்; கிடைக்காது!

தன்னைக் காப்பாற்றிய பன்றியின் மேல் ஆசை கொண்ட பூமி; உடனே கல்யாணமும் செய்து கொண்டது!

★★ பன்றிக்கும் பூமிக்கும் கல்யாணமா?...ஐயையோ! இது என்ன வேடிக்கை! இப்படியும் நடக்குமா?

இருவருக்கும் ஒரு குழந்தை பிறந்தது; வளர்ந்தது; பின்னால் நரகாசுரன் என்ற பெயரில் பெரிய அரக்கனானான். தேவர்களுக்கு தொல்லை கொடுத்தான்!

உடனே கடவுள் கிருஷ்ணன் உருவெடுத்து நரகாசுரனுடன் சண்டையிட்டார். மூர்ச்சை அடைந்தார். கடைசியில் கிருஷ்ணனின் மனைவி வந்தாள்; நரகாசுரனைக் கொன்றாள்.

நரகாசுரன் கொல்லப்பட்ட தினம்தான் தீபாவளி. அதற்குத்தான் கொண்டாட்டமாம்! இதுதான் தீபாவளிக் கதை!

★★ அப்பாடா!' கேட்டீர்களா, குப்பைக் கதையை! நம்புகிறீர்களா, இந்த ஆபாசத்தை? அடடா... என்ன இது? எங்கே ஓடுகிறீர்கள்? 'தீபாவளி வேண்டாம்' என்று அப்பா அம்மாவிடம் சொல்லவா? சொல்லுங்கள்; சொல்லுங்கள்; நீங்கள்தான் சிங்கத் தம்பிகளாயிற்றே! தங்கத் தங்கைகளாயிற்றே!

'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும்
தோழர்:
(●) எஸ். மோகன்,
13, எஸ். எம். கட்டிடம்,
முதல் மாடி, தாராவி,
பம்பாய்—17.

சே. ம. மோசே; மதுரை.

(?) திராவிடநாடு பிரிந்தால் போலிகளுக்கு இடமுண்டா?

இல்லை; 'போலி'கள் சமையற்கட்டில் வேண்டுமானால் இருக்கலாம்!

இரா. நல்லசாமி; விருதுநகர்.

(?) முட்டாள்களின் இருப்பிடம் யாது?

தற்புகழ்ச்சிக்காரர்களின் சுற்றுப்புறம்!

ஏசையன்; சிறுகுன்று.

(?) ஆகாயம் ஏன் நீல நிறமாக இருக்கின்றது?

காதலன் சந்திரன் கைவிட்ட காரணத்தால் அது விஷம் குடித்துவிட்டது; அதனால் தான்!

அச்கிம்; அரகண்டநல்லூர்.

(?) நீர் கோபுரத்தை வெறுப்பவரா?

இல்லை; நல்ல கொள்கைக்காக கோபுரம் நிறுவப்பட்டிருந்தால் அதை வரவேற்பவன்!

ராசமாணிக்கம்; அய்யம்பேட்டை

(?) இந்தியாவில் அதிக நாள் ஜீவித்திருக்க முடியாத பிராணி எது?

தேர்தல வேட்டைக்குப் புறப்படும் மாடு!

மா. தங்கைமணியம்;
அன்னம் திருச்சேறை.

(?) காதலில் கசப்பு தட்டுவது எப்போது?

புது ஆண்டு பிறக்குந் தோறும் புதுக் குழந்தைகளும் தொடர்ந்து பிறக்கும்போது!

எஸ். ஏ. சாமி; குருமலாங்குடி.

(?) காந்தியைக் கொன்ற கோட்சே குற்றவாளியா?

இல்லை; அவன் காந்தியை தற்கொலைக் குற்றத்திலிருந்து காப்பாற்றியவன்!

கே. எம். தங்கவேல்;
கவுண்டம்பாளையம்.

(?) வாள் பிடிக்கத் தெரியாத நேருவை, அலகாபாத் வீரர்—என்று அழைக்கிறீர்களே; எப்படி?

அவருடைய வாய்வீச்சு ஒன்றே வாள் வீச்சைப் போல ஆரவாரம் கிளப்புகிறதே; அதனால் தான்!

மு. கி. வாசன்; சென்னை-3.

(?) நகரசபைத் தேர்தலில், காங்கிரஸ்காரர்களே காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிடுகிறார்களே; ஏன்?

பூனை தன் குட்டிகளையே விழுங்கி ஏப்பமிடுவதில்லையா? அதைப் போலத்தான் இந்த அரசியற் பூனைகளும் செய்கின்றன!

(●) மோகன்; தாராவி.

(?) ஓய், எழுத்தாணியாரே! காங்கிரஸ் கட்சிக்கு கால் உண்டா?

'வடிகால்'தான் உண்டு; 'பாய்கால்' இல்லை!

அறிவிப்பு

நான் எழுதிய ஐந்து சிறுகதைகள் 'பழக்கூடை' என்ற பெயரில், திருச்சி திராவிடப் பண்ணையார் என் அனுமதி பெற்று ஒரு ரூபாய் விலைக்கு வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கிடையே சென்னையிலே கே. ஆர். நாராயணன் என்ற பேர்வழி, ஒரே ஒரு சிறுகதையை மட்டும் என் பெயரில், என் அனுமதியும் பெறாமல் எட்டணா விலைக்கு வெளியிட்டு மோசடி செய்துள்ளார். அந்த நபர் மீதும், அதை அச்சிட்டவர் மீதும் சட்டப்படி கிரிமினல் வழக்கு தொடர முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். அவர் வெளியிட்டுள்ள 'காதல் ஓவியம்' என்ற புத்தகத்தை பொது மக்கள் வாங்கி, திருட்டு வியாபாரிகளை ஆதரிக்க வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,
மு. கருணாநிதி

வெளி வந்துவிட்டது!

திராவிடர் நாட்குறிப்பு (டயரி) 1956.

இந்த டயரியில், தி. மு. க. முழு விபரங்கள், சட்டதிட்டங்கள், பேச்சாளர் முகவரிகள், 1100 தி. மு. க. கிளைகளின் பட்டியல், அஞ்சல், பத்திரப் பதிவுக் கட்டணங்கள், விற்பனை வரி—வருமான வரி விபரங்கள் உள்ளன.

பக்கந்தோறும் உலக அறிஞர்களின் புதிய பொன்மொழிகள்.

அழகிய முழு காலிசோ டைண்டு
500 பக்கம்—விலை ரூ. 1. செலவு தனி
விற்பனையாளர் கழிவு 20 சத வீதம்.
ஒரு டயரி வேண்டுவோர் ரூ. 1—3—0 அனுப்புக.

குறிப்பு: தி. மு. க. தலைவர்களின் பெரிய படங்கள், பொங்கல் வாழ்த்துக்கள் கிடைக்கும்.

'போர்வாள்', 147, பவழக்காரத் தெரு, சென்னை-1.

விரைவில் ஆரம்பமாகிறது !

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.